BHARATA MATA

TAMIL READERS

THIRD BOOK

(Accords exactly with the latest Departmental Syllabus)

Approved by the Text-Book Committee for Class Use
Vide Fort St. George Gazette, Page 24 Part I
Dated 22-5-51.

C. RAGHUNATHAN, B.A., L.T., T.D. (Lond.) M.R.S.T.
Deputy Director of Public Instruction, Madras.

REVISED EDITION

THE INDIAN PUBLISHING HOUSE, LTD.
MADRAS.
1952

பாரத மாதா

தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

Approved by the Text-Book Committee for Class Use Vide Fort St. George Gazette, Page 5 Part I-B, Dated 14—5—46

C. இரகுநாதன், B., A. L. T. (Lond.) M. R. S. T.
டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸர்

(திருத்திய பதிப்பு)

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

பதிப்புரிமை] **1952** [விலை 6 அணா

நூன்முகம்

ஆரம்பப் பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தில் பாஷை வெகு முக்கியமான தென்பது அனைவரும் அறிந்தது. மனத்தில் உள்ள விஷயங்களைத் தெரிவிப்பதற்கு ஆதாரமா யிருப்பவை சொற்களே. விஷயங்களை மனத்தினுள் நினைப்பதற்கும் சொற்களே ஆதாரமா யுள்ளன. குழந்தைகளைப் பாஷையில் தேர்ச்சி பெறச் செய்வதற்கு உபாத்தியாயர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவெனில் பாஷைகுழந்தைகளுக்கு உற்சாக மூட்டக் கூடியதாயும் அது அவர்களுடைய கற்கக்கூடிய சக்தியின் அளவுக் குட்பட்டதாயும் இருத்தல் வேண்டு மென்பதே. முதன் முதலாகப் பாஷை பேச்சு மூலமாய் அதிகமாக உபயோகப் படுகிறது. எழுதுவது, அதற்கு அடுத்தபடி என்பதும் உண்மை, ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வகுப்புவரை படித்தவரின் சக்தி பெரும்பான்மையாகப் பேசுவதற்கும், சிறுபான்மை எழுதுவதற்கும் உபயோகப்படுகிறது.

ஆகையினால், சிறு பிராயத்தில் குழந்தைகள் பிறர் நன்றாகப் பேசுவதைக் கேட்பதோடு, தாமே பேசுவதற்கும் பயிலவேண்டும். பேசுவதற்கு ஏற்படும் பழக்கமெல்லாம் பெரும்பாலும் வாசகத்தைப் படிப்பதனாலேயே உண்டாகிற தென்னலாம். அவ்வாசகத்தை உரக்கப் படிப்ப தென்பதில், கண்கள் கோர்வையாகப் பார்ப்பது, சரியாக உச்சரிப்பது, புது வார்த்தைகளைக் கவனிப்பது, அவற்றின் அர்த்தத்தைக் கிரகிப்பது, ஒரு திட்டமான வேகத்தில் படிப்பது ஆகிய இவையாவும் அடங்கியுள்ளன. அதைவிட முக்கியமானதும் சிரமமானதுமான மௌனப் படிப்பு இதுகாறும் செவ்வனே கவனிக்கப் படவில்லை எனத் தோன்றுகிறது. பெரியவர்களான பொழுது, இவ்வகைப் படிப்பே பெரும்பாலும் உபயோகப் படுகிறது. உரக்க வாசித்தலில் (செய்யுள் நீங்கலாக) உற்சாகம் சிறிதே ஏற்படுகின்றது. துரிதமாக விஷயங்களைக் கிரகிக்கவும், உற்சாகமடையவும் மிகவும் ஏற்றது மௌனப் படிப்பே. சாதாரணமாக அனேகப் பாடப் புத்தகங்களில் உள்ள வார்த்தைகளைக் கவனிக்குமிடத்தில் அவற்றில் பல, சில எழுத்துக்


களைக் கற்பிப்பதற்கே ஏற்பட்டுள்ளன. அவ் வார்த்தைகள் குழந்தைகளுக்கு அர்த்தமாவதில்லை ; அவர்களுக்கு உற்சாகம் கொடுப்பதுமில்லை. தவிர, முதற் புத்தகத்தில் வந்த வார்த்தைகளை மறுமுறை அவர்கள் பார்ப்பதற்கோ, கேட்பதற்கோ இடம் ஏற்படுவதில்லை ; மேல் வகுப்புகளில் மௌனப் படிப்பிற்குப் பயிற்சி அளிப்பதுமில்லை. அப்பயிற்சி ஏற்பட்டால் குழந்தைகள் தங்கள் அபிப்பிராயத்தைச் செவ்வனே வெளியிடுவதற்கு முடியும். தவிரவும் வாசகங்களிலுள்ள பாடங்கள் பெரும்பாலும் பொது அறிவு சம்பந்தமான பாடங்களாக இருத்தலால், பாலர்கள் விஷயங்களைக் கவனிக்கிறார்களேயன்றி, பாஷா அபிவிருத்தியைக் கவனிப்பதில்லை.

இப் புத்தகங்களில் சாதாரணமாக அவசியமானவையும் எல்லோரும் உபயோகிக்கின்றவையுமான வார்த்தைகளே கணக்கிட்டு உபயோகப்பட்டிருக்கின்றன. தவிர இவ்வாசகம் தினசரிப் பத்திரிகைகளை வாசிக்கவும், கிரகிக்கவும் போதுமான சக்தியையும் அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பாடங்களில் வரும் புதுப் பதங்களைக் கவனித்தும், இறுதியில் காணப்படும் பயிற்சிகளையும், கேள்விகளுக்கு விடைகளையும் முறையாக செய்தும் வந்தால், பாலர்கள் பிறர் முயற்சியின்றி இயல்பாகவே பாஷையைக் கற்கவும் அதில் தேர்ச்சி பெறவும் கூடுமென எதிர்பார்க்கப் படுகிறது. இவற்றில் உபாத்தியாயர்கள் வழிகாட்டிகளாக இருத்தல் வேண்டுமென்பது ஆசிரியரின் வேண்டுகோள். இதில் சிறு இலக்கண விஷயங்களையும் உதாரணங்கள் மூலமாகவும் கற்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் குழந்தைகள் தாய்பாஷையைச் செவ்வனே கற்று, மேன் மேலும் அபிவிருத்தியை அடைவார்களாக.

ஆசிரியர்

பொருளடக்கம்

அப்பியாசம் 1



ஒவ்வொரு வாக்கியத்தையும் விளக்கும் படத்தின் எண்ணை, அந்தந்த வாக்கியத்திற்கு நேராக எழுது:—

வாக்கியங்கள்

படத்தின் எண்

ரயில் வேகமாக ஓடுகிறது.

ஓர் எலி கூண்டில் இருக்கிறது.

குரங்கு மரத்தின் உச்சியில் இருக்கிறது.

குடியானவன் வயலை உழுகிறான்.

குழந்தை தொட்டிலில் தூங்குகிறது.

பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன.

வைத்தியர் காயத்தில் மருந்துவைத்துக் கட்டுகிறார்.

பெண்கள் கோலாட்டம் போடுகிறார்கள்.


தையற்காரன் துணியைக் கத்திரிக்கிறான்.

தோட்டக்காரன் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறான்.

நதியில் பலர் ஸ்நானம் செய்கிறார்கள்.


பையன்கள் கோலி விளையாடுகிறார்கள்.

அப்பியாசம் 2



ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

அப்பியாசம் 3



ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

அப்பியாசம் 4

ஒவ்வொரு வாக்கியத்திலும் குறிப்பிட்ட எழுத்து வந்துள்ள வார்த்தையைமட்டும் எடுத்து எழுது:—

எண்	வாக்கியம்	எழுத்து	வார்த்தை
1	இது ஒரு தென்னந்தோப்பு.	ன	தென்னந் தோப்பு
2	தென்னை மரம் மணல் பிரதேசங்	ண	
	களில் நன்றாக வளரும்.	ந	
3	தென்னை வேர்களினால் பூமியிலிருந்து உணவை உட்கொண்டு வளருகிறது.	ணா	
4	தேங்காயின் மேலுள்ள மட்டையிலிருந்து நார் எடுத்துக் கயிறு திரிக்கலாம்.	நா	
5	தென்னையில் ஒவ்வொரு பாகமும் வீணாகாமல் பயன்படக்கூடியது.	ண்	
6	துணை இல்லாமல் அயலூருக்குச் செல்லலாகாது.	ணை	
7	இராமனை இங்கே கூப்பிடு.	னை	
8	இன்னொரு வேஷ்டி வாங்கு.	னொ	
9	மண்ணொட்டன் நேற்று வரவில்லை.	ணொ	
10	நொண்டி ஒருவன் பிச்சைக் கேட்டான்.	நொ	
11	என்னோடு கடைக்கு வருகிறாயா ?	னோ	
12	கண்ணோய் தொத்து வியாதிகளில் ஒன்று.	ணோ	
13	நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.	நோ	

அப்பியாசம் 5

ஒவ்வொரு வாக்கியத்திலும் குறிப்பிட்ட எழுத்து வந்துள்ள வார்த்தையைமட்டும் எடுத்து எழுது:—

எண்	வாக்கியம்	எழுத்து	வார்த்தை
1	காடுகளில் மரங்கள் அடர்ந்து வளருகின்றன.	ர	________
		ற	________
2	இராட்டையைச் சுற்றி நூல் நூற்கிறார்கள்.	ரா	________
		று	________
3	வேறொரு ரொட்டித் துண்டு கொண்டுவா.	ரொ	________
		றொ	________
4	ரோஜாப் பூ அழகும் மணமும் பொருந்திய புஷ்பம்.	ரோ	________
5	பெற்றோர் சொற்படி நட.	றோ	________
6	ஆலமரம் ஓங்கி உயர்ந்து பரந்து வளரும்.	ரு	________
7	சில சிறுவர்கள் ஆலம்பழங்களைத் தின்பதுண்டு.	று	________

1. எங்கள் பள்ளிக்கூடம் (சம்பாஷணை)

உபாத்தியாயர்	ஆரம்பம்	பயிரிடு
உபாத்தியாயினி	ஸ்ரீமான்	க்ரோடன்ஸ்
ஸ்ரீமதி	கற்பி	போஷி
அன்பாய்	விரும்பு	இறைத்து

மாமா: மணி, உன் பள்ளிக்கூடம் எங்கே இருக்கிறது?

மணி: மாமா, என் பள்ளிக்கூடம்——தெருவில் இருக்கிறது.

மாமா: உன் பள்ளிக்கூடத்தில் எத்தனை வகுப்புகள் இருக்கின்றன?

மணி: ——வகுப்புகள் இருக்கின்றன.

மாமா: எத்தனை உபாத்தியாயர்கள் வேலை பார்க்கிறார்கள்?

மணி: ——உபாத்தியாயர்கள் வேலை பார்க்கிறார்கள்.

மாமா: உன் உபாத்தியாயர் யார்?

மணி: என் உபாத்தியாயர் ஸ்ரீமான்—— அவர் மிகவும் நல்லவர். எங்களிடம் மிகவும் அன்பாய் இருக்கிறார்.

மாமா: தலைமை உபாத்தியாயர் யார்?

மணி: ஸ்ரீமான்——

மாமா: மணி, உன் தம்பி கிட்டு எந்தவகுப்பில் படிக்கிறான்?

மணி: மாமா அவன் முதல் வகுப்பில் படிக்கிறான். முதல் வகுப்புக்கு ஓர் உபாத்தியாயினி பாடம் கற்பிக்கிறாள்.

மாமா: அந்த அம்மாளின் பெயர் என்ன?

மணி: அந்த அம்மாளின் பெயர் ஸ்ரீமதி——

மாமா: உன் பள்ளிக்கூடம் எத்தனை மணிக்கு ஆரம்பமாகிறது? எப்பொழுது முடிகிறது?

மணி: காலையில்——மணிக்கு ஆரம்பமாகிறது.——மணிக்கு முடிகிறது. பிற்பகலில்——மணிக்கு ஆரம்பமாகி மாலை——மணிக்கு முடிகிறது.

மாமா: உங்கள் பள்ளிக்கூடம் சிறிய கட்டிடமா; பெரிய கட்டிடமா?

மணி: சிறியகட்டிடம்தான். ஆனாலும், அது அழகாக இருக்கும். சுவர்களில் அழகான படங்கள் மாட்டி தொங்கவிடப்பட்டிருக்கின்றன. நாங்கள் எங்கள் வகுப்பறைகளை அழகாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ளுவோம்.

மாமா: உங்கள் பள்ளிக்கூடத்தில் தோட்டம் இருக்கிறதா?

மணி : ஆம் மாமா. ஒரு சிறிய தோட்டம் இருக்கிறது. அதில் சாமந்தி, அந்திமந்தாரை, சூரிய காந்தி, ரோஜா முதலிய புஷ்பச் செடிகளையும், முல்லை, இருவாட்சி முதலிய பூங்கொடிகளையும் வளர்க்கிறோம். கத்தரி, வெண்டை முதலிய காய்க் கறிச் செடிகளைப் பயிரிட்டிருக்கிறோம். அவரை, புடல், பீர்க்கு முதலிய கொடிகளைப் பந்தலில் படர விட்டிருக்கிறோம். தோட்டத்தின் ஓரமாக வாழை மரங்களை வைத்திருக்கிறோம். தவிர, பல தொட்டிகளில் அழகிய ‘கிரோட்டன்ஸ்’ களையும் வைத்துப் போஷிக்கிறோம்.

மாமா : தோட்டத்திற்குத் தண்ணீர் ஊற்றுவது யார் ?

மணி நாங்கள்தான். தோட்டத்தின் பக்கத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டுவந்து ஊற்றுவோம்.

மாமா : மணி! நான் உன் பள்ளிக் கூடத்தைப் பார்க்க விரும்புகிறேன். நீ என்னை அழைத்துக்கொண்டு போகிறாயா ?

மணி : ஆகட்டும், மாமா. கட்டாயம் கூட்டிக் கொண்டு போகிறேன்.

கேள்விகள்

1. பிள்ளைகள் வகுப்பறைகளை எப்படி வைத்துக் கொள்வார்கள் ?

2. பள்ளிக் கூடத்துத் தோட்டத்தில் என்னென்ன புஷ்பச் செடிகள் இருந்தன ?

3. தொட்டிகளில் வைத்துப் பயிர் செய்யப்பட்டிருப் பவை எவை ?

4. செடிகளுக்குத் தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது ?

அப்பியாசம் 6


1. உன் பள்ளிக் கூடத்தைப் பற்றி ஐந்து வாக்கியங் கள் சொல்லு. பிறகு அந்த வாக்கியங்களை எழுது.

2. குரங்கின் சேஷ்டை

சேஷ்டை	ஆப்பு	வானரம்
அறுவாயில்	பணக்காரர்	ஆராயாது
வீறிட்டு	மர்க்கடம்	பிரபு
வாட்காரர்	மந்தி	கபி
வாள்	கழன்று	அலறிக்கொண்டு

ஓர் ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவர் மிகுந்த பணக்காரர் ; ஏழைகளிடம் அன்பாக இருப்பார் ; அவர் ஒரு பங்களா கட்ட நினைத்தார் ; காட்டி லிருந்து பெரிய மரக்கட்டைகளை வெட்டிக் கொண்டு வந்து தம் தோட்டத்தில் அடுக்கி வைத்திருந்தார்.

வாட்காரர்கள் தினந்தோறும் வந்து அக்கட்டைகளை வேண்டிய அளவுப்படி வாளால் அறுத்து வந்தார்கள். ஒரு நாள் வாட்காரர்கள் ஒரு நீண்ட மரத்துண்டை இரண்டாக பிளக்கும் பொருட்டு வாளால் அறுத்துக்கொண்டிருந்தார்கள். நடுப்பகல்



நேரம் ஆயிற்று. அவர்களுக்குப் பசி யெடுத்தது. மரக்கட்டை பாதி தூரம் தான் அறுப்பட்டிருந்தது. அறுப்பட்ட பாகங்கள் ஒன்று கூடாது இருக்கும் பொருட்டு அவைகளுக்கு இடையில், அறுவாயில் ஒரு மரமுளையை வைத்துவிட்டு, வாட்காரர்கள் சாப்பிடச் சென்றார்கள்.

அவர்கள் சென்றதும், அத்தோட்டத்திலிருந்த குரங்குகளில் ஒன்று அங்கே வந்தது. அது மரக்கட்டையின் மீது ஏறி, அங்குமிங்கும் குதித்து ஓடி விளையாடிற்று. கடைசியில் அது மரமுளையின் பக்கத்தில் போய் உட்கார்ந்தது. முளையை பிடித்து இழுத்தது; வரவில்லை. வானரம் கோபங்கொண்டு முளையைப் பலமாகப் பிடித்து முன்னும் பின்னுமாக அசைத்து இழுத்தது. ஆப்பு கையுடன் வந்து விட்டது. ஆப்புக் கழன்று விடவே, அறுப்பட்டிருந்த பாகங்கள் 'படார்' என்று ஒன்று கூடின. அவைகளுக்கு இடையே வானரத்தின் வால் அகப்பட்டு நறுக்குண்டது. ஐயோ, பாவம்! கபி யாது செய்யும்! வலி பொருக்கமாட்டாமல் வீறிட்டு அலறிக்கொண்டு ஓடிற்று. முன் பின் ஆராயாது ஆப்பைப் பிடுங்கினதால் அன்றோ மந்திக்கு இக்கஷ்டம் ஏற்பட்டது.

எண்ணித் துணிக கருமம்.

கேள்விகள்

1. மரக்கட்டைகள் எங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன?
2. வாட்காரர்கள் மரமுளையை எங்கே வைத்தார்கள்? ஏன்?
3. வாட்காரர்கள் போன பிறகு குரங்கு என்ன செய்தது?
4. குரங்கு ஆப்பைப் பிடுங்கினதால் அதற்கு என்ன கஷ்டம் ஏற்பட்டது?

அப்பியாசம் 7

1. குரங்கைக் குறிக்கும் வேறு மூன்று வார்த்தைகள் எழுது.

2. அடுக்கி, கோபங்கொண்டு, பொருட்டு, வைத்து விட்டு—ஒவ்வொன்றையும் உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

3. இந்தப் பாடத்தில் எத்தனை பகுதி (பாராக்கள்) இருக்கின்றன ?

4. முதல் பாராவில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன ?

5. ஓர் ஊரில் ஒரு பிரபு இருந்தார்—இந்த வாக்கியத்தில் எத்தனை வார்த்தைகள் இருக்கின்றன ?

6. எழுத்து, வார்த்தை, வாக்கியம்—ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுது.

அப்பியாசம் 8


கீழே எழுதியுள்ள கதையை மனத்திற்குள் படி. படித்த பிறகு சொல்லு.

(நேரம்-2 நிமிஷங்கள்)

எறும்பும் புறாவும்

ஒரு நீரோடையின் கரையில் ஒரு பெரிய ஆல






மரம் வளர்ந்திருந்தது. அந்த மரத்தின் ஒரு கிளையில்

ஒரு புரு உட்கார்ந்திருந்தது. ஓடை நீரில் ஓர் எறும்பு விழுந்தது. அது கரையேற முடியாமல் தத்தளித்தது.

புரு ஓர் ஆலிலையைப் பறித்து எறும்பின் அருகில் போட்டது. எறும்பு இலையின் மீது ஏறிக்கொண்டது. இலை கரையில் ஒதுங்கிற்று. எறும்பு இலையை விட்டு இறங்கித் தன் புற்றுக்குப் போயிற்று.

ஆலமரத்தின் அடியில் ஒரு வேடன் வந்தான். அவன் புருவைக் கண்டான். அதைத் துப்பாக்கியால் சுட நினைத்தான்; குறி பார்த்தான்.

சுடும் சமயத்தில் எறும்பு அவனைச் 'சுரீர்' என்று கடித்தது. துப்பாக்கி குறிதவறி 'டப்' என்று வெடித்தது. புரு 'தப்பினோம், பிழைத்தோம்' என்று நினைத்துப் பறந்தது.





வேடன் வருத்தத்துடன் தன் வீடு நோக்கிச் சென்றான்.



3. மாடு மேய்க்கும் சிறுவர்கள்

வீடுவீடாக	பசி ஆறுதல்
துள்ளிக்குதித்து	வசதி
அஸ்தமிக்கும்பொழுது	தந்தம்
தொழுவம்	வயிறார
சிறுவர்கள்	மாதந்தோறும்
எஜமானர்	மந்தை மந்தையாக

பிள்ளைகளே, இந்தப் படத்தைப் பாருங்கள். இரண்டு சிறுவர்கள் ஒரு மரத்தின் நிழலில் கோலி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா! அவர்கள் மாடு மேய்க்கும் சிறுவர்கள். அவர்கள் பக்கத்திலுள்ள கிராமத்திலிருந்து மாடுகளை மேய்க்கும்

பொருட்டு ஓட்டிக்கொண்டு வந்திருக்கின்றனர். மாடுகள் புல்மேய்ந்து கொண்டிருக்கின்றன. சிறுவர்கள் மாடுகளை மேயவிட்டு, மரநிழலில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் தினந்தோறும் காலையில் வீடுவீடாகச் சென்று மாடுகளை ஓட்டிக்கொண்டு வருவார்கள். புல்லுள்ள இடங்களில் அவைகளை மேயவிடுவார்கள். அவை மாலை வரையிலும் புல்லை வயிறார மேயும். அது வரையிலும் இச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டே நேரத்தைப் போக்குவார்கள். பசிக்கும்பொழுது அவர்கள் கலயத்தில் கொணர்ந்த கஞ்சியைக் குடித்துப் பசி ஆறுவார்கள்.

சூரியன் அஸ்தமிக்கும்பொழுது இவர்கள் மாடுகளை கிராமத்துக்கு ஓட்டிச் செல்வார்கள். சாயங்காலத்தில் மாடுகள் மந்தை மந்தையாகக் கிராமத்தை நோக்கிச் செல்வது மிகவும் அழகாய் இருக்கும். மாடுகள் கிராமத்தை அடைந்ததும், தத்தம் எஜமானர்களின் வீடுகளை நோக்கித் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடும்.

மாடுமேய்ப்பவர்கள் தாம் ஓட்டி வந்த மாடுகள், சொந்தக்காரர்களின் வீட்டை அடைந்துவிட்டனவா என்று விசாரித்துவிட்டுத் தம்தம் வீடுகளுக்குச் செல்வார்கள். மாட்டின் சொந்தக்காரர்கள் மாடு மேய்ப்பவர்களுக்குச் சோறு கொடுப்பார்கள். தவிர, மாதந்தோறும் சம்பளமும் கொடுப்பதுண்டு.

கிராமங்களில் தான் மாடுகளைப் புல்வெளிகளுக்கு ஓட்டிச் சென்று மேய்க்க வசதியுண்டு. பட்டணங்களில் இவ்விதம் மாடுகளை வெளியே கொண்டு போய் மேய்க்க முடியாது. ஆகையால், பட்டணங்களில் மாடுகளை வளர்ப்பவர்கள், அவைகளைத் தொழுவங்களில் கட்டித் தீனி போட்டுப் பாதுகாத்து வருகிறார்கள். இந்த மாடுகளுக்கு வேண்டிய தீனி அருகிலுள்ள கிராமங்களிலிருந்து கொண்டுவரப் படும்.

கேள்விகள்

1. மரத்தடியில் இருக்கும் சிறுவர்கள் யார்?
2. அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் ?
3. அவர்கள் பகலில் எப்படிப் பசி ஆறுவார்கள் ?
4. பட்டணங்களில் மாடுகளை எப்படி வளர்ப்பார்கள்.

அப்பியாசம் 9

1. இப்பாடத்தின் ஆரம்பத்தில் காணப்படும் படத்தைக் குறித்து, மூன்று வாக்கியங்கள் எழுது.
2. வயிறார, மந்தை மந்தையாக, மாதந்தோறும் —இவைகளைத் தனித்தனியே உபயோகித்து வாக்கியங்கள் எழுது.



4. சேவலும் நாயும்

உல்லாசமாக	மிருகராஜன்	பாட்டுக் கச்சேரி
அன்று	கலியாணம்	புத்தியுள்ளது
தீர்மானி	பாகவதர்	தந்திரம்
கண்விழி	உத்திரவு	நன்ருக
கூவினது	தற்செயலாய்	குரு
தயவுசெய்து	அரண்மனை	ஓட்டம்

ஒரு சேவலும் ஒரு நாயும் வெகு சினேகமாய் இருந்தன. அவை இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிவதில்லை. ஒரு நாள் அவை இரண்டும் வெளியே உலாவச் சென்றன. அவை உல்லாசமாகப் பேசிக்

கொண்டே நடந்தன. ஒரு காட்டிற்குள் வெகுதூரம் அவை போய்விட்டன.

சூரியனும் மறைந்தது. எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. சேவலுக்கும் நாய்க்கும் வீட்டுக்குத் திரும்பிவர வழி தெரியவில்லை. ஆகையால், அவை அன்று இரவில் காட்டிலேயே தங்கிவிடத் தீர்மானித்தன.

சேவல் ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்து தூங்கியது. நாய் அந்த மரத்தினடியில் படுத்து உறங்கியது.

சேவல் அதிகாலையில் எழுந்து விட்டது. நாய் கண்விழிக்க வில்லை; தூங்கிக் கொண்டிருந்தது. சேவல் 'கொக், கொக், கோ' என்று கூவிற்று. இக்கூச்சலை ஒரு நரி கேட்டது. அது சேவலைப் பிடித்துத் தின்ன ஆசைப்பட்டது.

நரி மரத்தருகே ஓடிவந்து, சேவலைப் பார்த்து, "நண்பரே, மிருகராஜன் மகளுக்கு நாளை தினம் கலியாணம். சிங்கராஜன் ஒரு பாகவ[illegible] அழைத்து வரும்படி எனக்கு உத்தரவு கொ[illegible] திருக்கிறார். ஆனால், இத்தனை நாளாகத் தேடியு[illegible] உம்மைபோல் பாடக்கூடிய பாகவதரைக் காண வில்லை. ஏதோ, தற்செயலாய் இன்று உம்மைக் கண்டேன். தாங்கள் தயவுசெய்து என்னுடன் அரசரின் அரண்மனைக்குவந்து நாளைக்குப் பாட்டுக் கச்சேரி நடத்தவேண்டும்'! என்று சொல்லிற்று.

சேவல் மிகவும் புத்தியுள்ளது. அதற்கு நரியின் தந்திரம் நன்கு தெரியும். அது நரியைப் பார்த்து,

"நரியாரே என்னைக்காட்டிலும் நன்றாகப் பாடக் கூடியவர் எனது குரு. அவர் மரத்தினடியில் படுத் திருக்கிறார். அவரை எழுப்பிக் கூப்பிடும்" என்றது.

நரி சேவலின் வார்த்தையை நம்பி, அதன் குருவைக் காண மரத்தைச் சுற்றி வந்தது. அங்கு ஓரிடத்தில் நாயைக் கண்டது. கண்டதும் எடுத்தது ஓட்டம்! ஒரே ஓட்டம்! அது திரும்பிப் பார்க்கவே இல்லை.

நரி சேவலை ஏமாற்ற நினைத்தது. ஆனால் சேவல் நரியை ஏமாற்றி விட்டது.

கேள்விகள்

1. சேவலும் நாயும் ஒரு நாள் இரவில் எங்கே தங்கின?
2. சேவல் எங்கே தூங்கியது? நாய் எங்கே தூங்கியது?
3. அதிகாலையில் சேவலின் கூச்சலைக் கேட்ட நரி என்ன செய்தது?
4. சேவல் நரியை எப்படி ஏமாற்றியது?

அப்பியாசம் 10

பிரித்து எழுதுக:

உதாரணம்: வகுப்பறை = வகுப்பு + அறை

1. அயலூர் =
2. மாட்டப்பட்டிருக்கின்றன =
3. தோட்டத்திலிருந்து =
4. அங்குமிங்கும் =
5. வசதியுண்டு =

சேர்த்து எழுது :

உதாரணம் : விளையாடிக்கொண்டு + இருக்கிறார்கள்

விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

1. பக்கத்தில் உள்ள =
2. கொடுப்பது உண்டு =
3. வசதி உண்டு =
4. பிரிவது இல்லை =
5. மரத்தின் அடியில் =
6. படுத்து இருக்கிறார் =

அப்பியாசம் 11

இரண்டு வாக்கியங்களையும் ஒன்றுசேர்த்து எழுது:—

உதாரணம் : என் வகுப்பில் பதினைந்து பையன்கள் படிக்கிறார்கள்.

என் வகுப்பில் எட்டு பெண்கள் படிக்கிறார்கள்.

என் வகுப்பில் பதினைந்து பையன்களும் எட்டு பெண்களும் படிக்கிறார்கள்.

1

தோட்டத்தில் வாழைமரங்கள் இருக்கின்றன.
தோட்டத்தில் தென்னை மரங்கள் இருக்கின்றன.

2

செடிகளுக்கு நான் தண்ணீர் ஊற்றுவேன்.
செடிகளுக்கு என் அண்ணன் தண்ணீர் ஊற்றுவான்.

3

இராமன் உலாவப் போனான்.
இருஷ்ணன் உலாவப் போனான்.

4

என் பள்ளிக்கூடம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.
என் பள்ளிக்கூடம் மாலை 4 மணிக்கு முடிகிறது.

5

பந்தலில் அவரை படர்ந்திருக்கிறது.
பந்தலில் புடல் படர்ந்திருக்கிறது.

அப்பியாசம் 12

இரண்டு வாக்கியங்களாக பிரித்து எழுது :—

உதாரணம்: நாங்கள் எங்கள் வகுப்பறைகளை அழகாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்வோம்.

நாங்கள் எங்கள் வகுப்பறைகளை அழகாக வைத்துக்கொள்வோம்.

நாங்கள் எங்கள் வகுப்பறைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வோம்.

1. காட்டிலிருந்த பெரிய மரக்கட்டைகளை வெட்டிக் கொண்டு வந்து தோட்டத்தில் அடுக்கி வைத்தார்.

2. வாட்காரர்கள் தினந்தோறும் வந்து மரக்கட்டைகளை வேண்டிய அளவுபடி வாளால் அறுத்தார்கள்.

3. குரங்குகள் மரக்கட்டையின்மீது ஏறி, அங்குமிங்கும் குதித்து ஓடின.

4. சிறுவர்கள் மாடுகளை மேயவிட்டு, மர நிழலில் விளையாடினார்கள்.

5. நீர் தயவு செய்து என்னுடன் அரசன் அரண்மனைக்கு வந்து, பாட்டுக் கச்சேரி நடத்தவேண்டும்.



5. வீண் சண்டை கூடாது

சற்று	இறைச்சி	மித்திரன்
மொழிந்தது	புசி	சம்மதி
மாமிசம்	பகர்ந்தது	எவ்விதம்

ஒரு குடியானவன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். சற்று தூரத்திலுள்ள ஒரு மரத்தினடியில் அவன் ஒரு புல் கட்டு வைத்திருந்தான். அங்கே ஒரு வெள்ளாடும், கன்றுக்குட்டியும் வந்தன. அவை இரண்டும் புல்லைத் தின்ன விரும்பின.

வெள்ளாடு கன்று குட்டியைப் பார்த்து, "நான் தான் முதலில் இங்கு வந்தேன். முதலில் புல்

லைப் பார்த்தேன். ஆகையால், அந்தப் புல் எனக்குத்தான். நான்தான் அதைத் தின்பேன்" என்றது.

கன்றுக்குட்டி வெள்ளாட்டை நோக்கி, "நான்தான் முதலில் இவ்விடம் வந்தேன். நான்தான் முதலில் புல்லைக் கண்டேன். ஆகையால், அந்தப் புல் எனக்கே உரிமையானது. நான்தான் அதை உண்பேன்" என்று கூறியது.

இவ்விதம் ஆடும், கன்றுகுட்டியும் சண்டை போட்டுக்கொண்டிருந்தன. அவை போடும் சண்டையை மரத்தின் கிளையிலிருந்த ஒரு கருடனும் ஒரு பருந்தும் பார்த்துக்கொண்டிருந்தன.

கருடன் பருந்தை நோக்கி, "ஆஹா, இன்று நமக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும். சண்டையில் ஆடு இறந்துவிடும், நாம் அதன் மாமிசத்தை தின்னலாம்'' என்று மொழிந்தது.

இதைக் கேட்ட பருந்து, கன்றுக்குட்டித்தான் இறந்துபோகும். "ஆடு தன் கொம்புகளால் கன்றுக் குட்டியைக் குத்திக் கொன்றுவிடும். நாம் கன்றுக் குட்டியின் இறைச்சியைப் புசிக்கலாம்" என்று பகர்ந்தது.

கருடனும், பருந்தும் பேசிக்கொண்டதைக் கேட்ட ஆடு கன்றுக்குட்டியை நோக்கி "மித்திரா, நாம் வீண் சண்டை போட்டு இறக்க வேண்டாம். நாம் இறந்து இந்தக் கருடனுக்கும், பருந்துக்கும் இரை ஆகவேண்டாம். நாமிருவரும் இந்தப் புல்லைப்

புசிப்போம்" என்றது. கன்றுக்குட்டியும் அதற்கு இசைந்தது. அவை இரண்டும் புல்லைத் தின்று விட்டு ஓடிவிட்டன. கருடனும் பருந்தும் கொட்டாவி விட்டுக் கொண்டு பறந்து போயின.

குடியானவன் மரத்தண்டையில் வந்து புல் கட்டைத் தேடினன்; புல்கட்டைக் காணுது விழித்தான். புல்கட்டு எவ்விதம் மறைந்தது என்று அவனுக்கு இதுவரையில் தெரியாது. வேண்டுமானல் நீ போய் அவனிடம் சொல்.

கேள்விகள்

1. புல்கட்டு எங்கே இருந்தது?
2. புல்கட்டைப் பார்த்த வெள்ளாடும் கன்றுக் குட்டியும் என்ன செய்தன?
3. வெள்ளாடும் கன்றுக்குட்டியும் சண்டை போடுவதை எவை பார்த்தன?
4. கருடன் என்ன சொல்லிற்று?

அப்பியாசம் 13

1

வாக்கியங்களில் உபயோகித்து எழுது:—

சற்று தூரத்தில், ஆகையால், இவ்விதம், எவ்விதம்.

2

சொல்லிற்று—இதே அர்த்தமுள்ள வேறு மூன்று வார்த்தைகள் எழுது.

3

புல்	குடியானவன்	மரத்தின்	வைத்திருந்தான்	அடியில்	கட்டு	

இந்த வார்த்தைகளை ஒழுங்குபடுத்தி ஒரு வாக்கியமாக அமைத்துக் காட்டு.

6. யானையிடம் குறும்பு செய்தவன்


குறும்பு	சேறு	திசைத்து	பட்டணம்
முகந்து	அவமானம்	தொழில்	வீதி
நஷ்டம்	பாகன்	செயல்	சோதித்தல்
மாவுத்தன்	அக்கம்	சூது	வழக்கம்
மதம்	பக்கம்	குற்றம்	வருத்தம்

ஒரு பட்டணத்தில் வேலன் என்ற ஒரு தையற்காரன் இருந்தான். அவன் அவ்வூர் கடைத் தெருவில் ஒரு சிறிய கடையை வாடகைக்கு அமர்த்தித் தன் தொழிலை நடத்தி வந்தான்.

அப்பட்டணத்தில் ஒரு சிவன் கோயில் உண்டு. அதில் ஒரு யானையை வளர்த்து வந்தனர். யானைப் பாகன் தினந்தோறும் அந்த யானையைக் கடைத் தெருவின் வழியாக நதிக்கு நடத்திச் செல்வது வழக்கம். யானை அவ்வழியே செல்லும்போது சில கடைக்காரர்கள் அதற்குத் தேங்காய், பழம் முதலிய பண்டங்களைக் கொடுப்பதுண்டு. யானையும் கடை வாயில்களில் நின்று, தன் துதிக்கையை நீட்டிக் கடைக்காரர் கொடுக்கும் பண்டங்களை வாங்கி வாயில் போட்டுக்கொண்டு செல்லும். தையற்காரன் வேலனும் அதற்குத் தினந்தோறும் பழங்களைக் கொடுப்பான்.

ஒருநாள் யானை நதிக்குச் செல்லுங்கால், அது வழக்கம்போல் வேலன் கடைவாயிலில் நின்று, தன் துதிக்கையை நீட்டியது. வேலன் விளையாட்டுக்காக

ஒரு வாழைப்பழத்தில் ஓர் ஊசியை சொருகி அதனிடம் கொடுத்தான். யானை அப்பழத்தை வாங்கும் பொழுதே அதில் ஊசி புதைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டது. ஆகையால், அது பழத்தை தின்னமல் வாயில் ஒதுக்கிக்கொண்டது.



யானை ஆற்றை அடைந்ததும், தன் துதிக்கையால் தண்ணீரை வாரி, வாரி மேலே ஊற்றிக் கொண்டு குளித்தது. கடைசியில், கால்களால் தண்ணீரைக் கலக்கிச் சேருக்கித் துதிக்கை நிறைய முகந்து கொண்டு புறப்பட்டது. மாவுத்தன் யானையைக் கடைத் தெருவின் வழியாக நடத்திச் சென்றான்.

யானை வேலன் கடையினருகே வந்ததும், அது அவன் கடையை நோக்கி நின்றது. தன் துதிக்கை

யில் முகந்து கொணர்ந்த சேற்று நீரை வேலன் மீதும், அவன் கடையிலிருந்த துணிகளின் மீதும் வீசி இறைத்தது. அவன் தனக்குக் கொடுத்த பழத்தையும் வாயிலிருந்து எடுத்து அவன் மீது எறிந்து விட்டுக் கோவிலை நோக்கி நடந்தது.

யானையின் செயலைக்கண்ட அக்கம்பக்கத்துக் கடைக்காரர்கள், யானைக்கு மதம் பிடித்து விட்டதோ என்று நினைத்துத் திகைத்து நின்றனர். யானை வேலன் மீது எறிந்த பழத்தை எடுத்துச் சோதித்த பொழுது, வேலன் செய்த சூது வெளிப்பட்டது. எல்லோரும் அவனைக் கோபித்துக் கொண்டனர். அவனும் தான் செய்த குற்றத்திற்காக மிகவும் வருத்தப்பட்டான்.

விளையாட்டினால் நேர்ந்த அவமானத்தையும் நஷ்டத்தையும் கவனித்தீர்களா!

விளையாட்டே வினையாயிற்று

கேள்விகள்

1. வேலனுடைய கடை எங்கே இருக்கிறது?
2. யானை கடைத்தெருவின் வழியாகச் செல்லும் பொழுது கடைக்காரர்கள் என்ன செய்வார்கள்?
3. ஒரு நாள் வேலன் யானையை எவ்விதம் ஏமாற்றினான்?
4. யானை எவ்விதம் வேலனுக்கு நஷ்டத்தை உண்டு பண்ணிற்று?

அப்பியாசம் 14

கீழ்கண்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:—

1. யானை ஆற்றை அடைந்ததும்————
2. யானை வேலன் கடையண்டை வந்ததும்————

3. குரங்கு ஆப்பைப் பிடித்து இழுத்ததும்———

. உபாத்தியாயர் வகுப்பிற்கு வந்ததும்———

5. யானை கடைத் தெருவின் வழியாகச் செல்லும் பொழுது———

6. நான் கடைக்குப் போகும் பொழுது———

7. உபாத்தியாயர் பாடம் கற்பிக்கும்பொழுது———

வாக்கியங்களில் அமைத்து எழுது:—

1. தினந்தோறும். 2. வழியாக. 3. கடைசியில்.

"வேலன் யானையை ஊசியினால் குத்தினான்."

—இந்த வாக்கியத்தில் எத்தனை வார்த்தைகள் இருக்கின்றன?

வேலன்—இது ஒரு மனிதனுடைய பெயர்.

யானை—ஒரு மிருகத்தை குறிக்கும் சொல்.

ஊசி—ஒரு பொருளைக் குறிக்கும் சொல்.

இவ்விதம் மனிதர், மிருகம், பொருள் இவைகளின் பெயர்களைக் குறிக்கும் சொற்களுக்குப் பெயர்ச் சொற்கள் என்று பெயர்.

இப்பாடத்தில் வந்துள்ள ஐந்து பொருள்களின் பெயர்களை எழுது.

7. தெனாலிராமன்

உளது	கட்டளை	விளித்து
பிராமணன்	ஆணை	ஏவினான்
செய்கை	ஆஞ்ஞை	பதில் அளித்தான்
அவை	சபை	புத்திசாதுர்யம்
விகடகவி	காவலாளி	அதட்டி
காரியம்	அச்சம்	வியந்து
வேடிக்கை	உத்தரவு	மன்னித்தார்

தெனாலி என்றோர் ஊர் உளது. அதில் வெகு காலத்துக்கு முன் இராமன் என்ற ஒரு பிராமணன் இருந்தான். அவன் செய்யும் ஒவ்வொரு செய்கையும் வேடிக்கையாக இருக்கும். அந்த ஊரில் அவனை அறியாதார் யாருமிலர். எல்லோரும் அவனைத் தெனாலிராமன் என்று அழைப்பது வழக்கம். அவன் இராயர் அவையில் விகடகவியாக இருந்து வந்தான்.

ஒரு நாள் தெனாலிராமன், அரசருக்குக் கோபம் உண்டாகும்படி ஏதோ ஒரு காரியம் செய்துவிட்டான், உடனே, அரசர் அவனை நோக்கி, "ஏ! தெனாலிராமா, இனிமேல் நீ உன் தலையை என் முன் காட்டாதே. காட்டினால், உன் தலையை வெட்டும்படி உத்தரவு இடுவேன். என்முன் நில்லாதே ஓடிப்போ" என்று கூறினார். அரசர் கட்டளைப் படி, தெனாலிராமன் பதில் ஒன்றும் பேசாமல் போய் விட்டான்.

மறுநாள் அரசர் சபையில் வீற்றிருக்கையில், தெனலிராமன் தன் தலை தெரியாவண்ணம் தலையில் ஒரு பானையைக் கவிழ்த்துக் கொண்டு சிறிதும் பயமின்றி அவருக்கு எதிரே அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். அதைக் கண்ட அரசர் காவ



லாளிகளை விளித்துத் தெனலிராமனைத் தம்மிடம் இழுத்து வரும்படி ஏவினர். அவர்களும் தெனலிராமனை இழுத்துக் கொணர்ந்து அரசன் முன் நிறுத்தினர்.

அரசர் தெனலிராமனை நோக்கி, "அடே, என்ன இது? சிறிதும் அச்சமின்றி என்முன் இவ்விதம் திரிகிறாய்" என்று அதட்டிப் பேசினர். தெனலிராமன் சிறிதும் பயப்படாமல், "அரசே என் தலையை தங்கள் முன் காட்டக்கூடாது

என்று ஆஞ்ஞாபித்தீர்கள். தாங்கள் ஆணைப்படி நான் என் தலையைத் தங்களுக்குக் காட்டவில்லை. தங்கள் உத்தரவை மீறி நான் யாதும் செய்ய வில்லையே'' என்று பதில் அளித்தான்.

இதைக் கேட்டு அரசரும் மற்றும் அங்குள்ளோரும் 'கொல்' என்று சிரித்தனர். அரசர் தெனாலி ராமனுடைய புத்தி சாதுர்யத்தை வியந்து அவனை மன்னித்தார்.

கேள்விகள்

1. தெனாலிராமன் எந்த ஊரில் இருந்தான்?
2. ஒரு நாள் அரசர் அவனுக்கு என்ன கட்டளை யிட்டார்?
3. தெனாலிராமன் தன் தலையை அரசர் முன் காட்டா திருக்க என்ன உபாயம் செய்தான்?

அப்பியாசம் 15

1. தசரதர் ஓர் அரசர். அவர் அயோத்தியில் இருந்தார்—இந்த இரண்டு வாக்கியங்களையும் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுது.
2. கண்ணாடியை கீழே போடாதே, போட்டால்—— வாக்கியத்தைப் பூர்த்தி செய்.
3. உத்தரவு, விளித்து, நோக்கி, மன்னித்தார்—— இந்த வார்த்தைகளை அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

4. ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகளை இணைசேர்

செய்கை	உல்லாசமாக	காரியம்
பயம்	தின்பேன்	வேலைக்காரன்
காவலாளி	மாமிசம்	உண்பேன்
உத்தரவு	கட்டளை	இறைச்சி
கூப்பிட்டு	இருக்கிறது	ஆப்பு
உளது	அச்சம்	தமாஷாய்
மூளை	அழைத்து	

5. தெனாலி என்றோர் ஊர் உளது.

யானை கோயிலை நோக்கி நடந்தது.

குடியானவன் வயலில் வேலை செய்கிறான்.

தெனாலி—ஓர் ஊரின் பெயர்.

கோவில்—ஓர் இடத்தின் பெயர்.

வயல்—ஓர் இடத்தைத் தெரிவிக்கும் சொல்.

இவ்விதம் ஊர்கள், வேறு இடங்கள் இவைகளைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச் சொற்கள் எனப்படும்.

ஆட்கள், ஊர்கள், மிருகங்கள், பறவைகள், பொருள்கள்—இவைகளின் பெயர்கள் பெயர்ச் சொற்கள் ஆகும். ஒரு சொல் ஏதாவது ஒன்றின் பெயரானால் அச்சொல் பெயர்ச்சொல் ஆகும்.

கீழ்கண்ட வாக்கியங்களிலிருந்து பெயர்ச் சொற்களை எடுத்து எழுது:—

அப்பியாசம் 16


1. குதிரை வண்டியை இழுக்கிறது.
2. கோவிந்தன் பள்ளிக்கூடம் போகிறான்.
3. தஞ்சாவூர் ஒரு பட்டணம்.
4. சேவல் அதிகாலையில் கூவுகிறது.
5. பசு நமக்குப் பால் கொடுக்கிறது.
6. பூனை வீட்டிற்குள் ஓடிற்று.
7. நான் இந்தப் படத்தை வரைந்தேன்.
8. சுவரின் மீது குருவி உட்கார்ந்திருக்கிறது.
9. பையன் சைகிளில் போகிறான்.
10. அண்ணன் காக்கைக்குச் சோறு போட்டான்.

மனிதர்களின் பெயர்கள்	மிருகங்களின் பெயர்கள்	பறவைகளின் பெயர்கள்	பொருள்களின் பெயர்கள்	இடங்களின் பெயர்கள்

8. பழக்கடை

பல பகையான	டஜன்	சில்லரை
சுமார்	வினவு	ஜனங்கள்
முதலாளி	வீதம்	லாபம்
விலை	பதில் உரை	நஷ்டம்
	வியாபாரி	

இது ஒரு பழக்கடை. இங்குப் பலவகையான கனிகள் இருக்கின்றன. மலைவாழைப்பழம் சீப்புச் சீப்பாய் இருக்கின்றன. ஒவ்வொரு சீப்பிலும்



சுமார் பத்து அல்லது பதினைந்து பழங்கள் இருக்கின்றன. மாம்பழங்கள், ஆரஞ்சுப் பழங்கள், ஆப்பிள் பழங்கள் இவைகள் தட்டுகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

கடை முதலாளி ஒரு பலகையின் மீது உட்கார்ந்திருக்கிறான். இரண்டு மனிதர்களும் ஒரு ஸ்திரீயும் கடைக்கு முன்னால் நிற்கிறார்கள். அவர்கள் பழங்களின் விலையைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அந்த ஸ்திரீ தன் கையில் ஒரு கூடையை வைத்திருக்கிறாள்.

இரண்டு மனிதர்களில் ஒருவர் கடைக்காரனை நோக்கி, "ஆரஞ்சுப் பழங்கள் டஜன் விலை என்ன?" என்று கேட்கிறார். கடைக்காரன் "ஆரஞ்சுப் பழங்கள் டஜன் பதினைந்து அணா" என்று பதில் சொல்லுகிறான். முதல் மனிதர் ஒரு டஜன் ஆரஞ்சுப் பழங்கள் வாங்கிக்கொள்ளுகிறார். கடைக்காரனிடம் ஒரு ரூபாய் கொடுத்தார்.

கடைக்காரன் ரூபாய் செல்லுமா? என்று அதை உற்றுப் பார்க்கிறான்; சுண்டிப் பார்க்கிறான். பலகையின் மீது தட்டிப் பார்க்கிறான் 'கிண்' என்று சத்தம் கேட்கிறது. ரூபாய் செல்லும். அதைப் பெட்டியில் போடுகிறான். பெட்டியிலிருந்து ஓர் அணா எடுத்து முதல் மனிதரிடம் கொடுக்கிறான். அவர் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போகிறார்.

இரண்டாவது மனிதர் கடைக்காரனை நோக்கி, "வாழைப்பழம் நூற்றுக்கு என்ன விலை ?" என்று கேட்கிறார். "மலைப்பழம் நூற்றுக்குப் பதினொன்கு அணா" என்று கடைக்காரன் பதில் அளிக்கிறான். அவர், "அணாவுக்கு எத்தனை பழங்கள் ?" என்று வினவுகிறார். கடைக்காரன், "அணாவுக்கு ஏழு பழங்கள் வீதம் கொடுக்கிறேன்" என்று பதில்

உரைக்கிறான். அவர் "இருபத்தைந்து பழங்கள் கொடு" என்கிறார்.

கடைக்காரன் இருபத்தைந்து பழங்களை எண்ணுகிறான். அவைகளை ஒரு சிறிய ஓலைப் பெட்டியில் வைத்துக் கொடுக்கிறான். இரண்டாவது மனிதர் கடைக்காரனிடம் நான்கு அணா கொடுத்து, "மீதிச் சில்லரை கொடு" என்கிறார். கடைக்காரன் அவரிடம் அரையணா கொடுக்கிறான். அவர் வீட்டுக்குத் திரும்புகிறார்.

அந்த ஸ்திரீ அரை டஜன் ஆரஞ்சுப் பழங்கள், முக்கால் டஜன் மாம்பழங்கள் இரண்டு சேர் திராக்ஷைப் பழம் இவைகளை வாங்கிக் கூடையில் போட்டுக்கொள்ளுகிறாள். கடைக்காரன் அவற்றின் விலையைக் கணக்கிட்டுச் சொல்லுகிறான். அவள் கடைக்காரனுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டு வீட்டுக்குப் புறப்படுகிறாள்.

கடைக்காரன் பல இடங்களிலிருந்தும், பழங்களைத் தருவித்து விற்கிறான். ஜனங்கள் பழங்களை வாங்குகிறார்கள். கடைக்காரனுக்கு மிகுந்த லாபம் கிடைக்கிறது. சில சமயங்களில் பழ வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதுண்டு.

கேள்விகள்

1. பழக்கடையின் முன்னால் யார் யார் நிற்கிறார்கள்?
2. ஆரஞ்சுப் பழம் வாங்கியவர் பழக்காரனிடம் எவ்வளவு பணம் கொடுக்கிறார்?
3. ஓர் அணாவுக்கு எத்தனை மலைப்பழம்?

4. கடைக்கு வந்த ஸ்திரீ என்னென்ன பழங்கள் வாங்கினுள் ?

அப்பியாசம் 17

1. ஒரு பழக்கடையில் பார்க்கக்கூடிய பழங்களின் பெயர்களை எழுது.
2. ஒரு பழக்கடையைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
3. சுமார், தருவித்து, நூற்றுக்கு, வீதம், லாபம்— இந்த வார்த்தைகளை அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.


எட்டாவது பாடத்தில் இரண்டாவது பாராவில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன? வாக்கியம் முடியும் இடத்தில் என்ன அடையாளம் இருக்கிறது? வாக்கியத்தின் கடைசியில் போட்டிருக்கும் புள்ளி, வாக்கியம் முடிந்து விட்டது என்பதை காட்டுகிறது.

அப்பியாசம் 18

சரியான இடங்களில் புள்ளிகளை இட்டுக்காட்டு

நான் ஒரு நாயை வளர்க்கிறேன் அதன் பெயர் டாமி நான் அதனிடம் பிரியமாயிருக்கிறேன் அதுவும் என்னிடம் பிரியமாயிருக்கிறது ஒரு நாள் அது என்னுடன் பள்ளிக்கூடம் வந்தது அது பள்ளிக்கூடத்திற்கு வந்ததும் எல்லாப் பிள்ளைகளும் 'கொல்' என்று சிரித்தார்கள் தலைமை உபாத்தியாயர் அங்கு வந்தார் நாயை வெளியே துரத்தினுர் அது வீட்டுக்கு ஓடவில்லை பள்ளிக்கூடம் விட்டு நான் வரும் வரையிலும் அது வெளியே காத்துக் கொண்டிருந்தது நான் வெளியே வந்ததும் வாலை ஆட்டிக் கொண்டு என்னிடம் ஓடி வந்தது நான் அதை தட்டிக் கொடுத்தேன் அதை என்னுடன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போனேன்.

அப்பியாசம் 19



படத்தைப் பார்த்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுக :—

படம் 1. தாயார் பையனை எங்கே அனுப்புகிறாள்? பையன் எங்கே போகிறான்?

படம் 2. பையன் வழியில் யாரை சந்திக்கிறான்?

படம் 3. இரண்டு பையன்களும் என்ன செய்கிறார்கள்?

படம் 4. யார் தலையிலிருந்து ரத்தம் வடிகிறது? சிநேகிதன் என்ன செய்கிறான்?

படம் 5. பையனை அழைத்துக்கொண்டு போவது யார்

படம் 6. பையன் என்ன செய்கிறான். அவனுக்கு மருந்து வைத்துக் கட்டிக்கொண்டிருப்பது யார்? தாயார் என்ன செய்கிறாள்?

பதில் எழுதுக :—

தாயார் பையனை எங்கே அனுப்புகிறாள்?

பையன் வழியில் யாரை சந்தித்தான்?

இருவரும் என்ன செய்தார்கள்?

யாருடைய தலையில் கல் விழுந்தது?

பையன் தலையில் கல் விழுந்ததும் சிநேகிதன் என்ன செய்தான்?

பையனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனது யார்?

அவனுக்கு மருந்து வைத்துக் கட்டினது யார்?

இப்பாடத்திலிருந்து நீ அறிவது என்ன?

இந்தக் கதைக்குச் சரியான தலைப்பு எழுது?

9. அப்பாஜியின் தந்திரம்


முதல் மந்திரி	பலவாறு	விதை
புத்திசாலி	சிந்தித்தார்	விதைத்து
புத்தி நுட்பம்	வரவழைத்து	செழித்து
தூதர்	செவியுற்று	அளவற்ற
விபரீதம்	கவலை	சந்தோஷம்
நிறைவேற்று	விடைபெற்று	யூகம், மெச்சிக் கொண்டார்

இராயரிடம் அப்பாஜி என்பவர் முதல் மந்திரியாக இருந்தார். அவர் மிகவும் புத்திசாலி. அவருடைய பெயர் நாடெங்கும் பரவிற்று. டில்லி பாக்ஷா அப்பாஜியின் புத்தி நுட்பத்தைக் கேள்விப்பட்டு அவரைச் சோதிக்க விரும்பினர்.

உடனே, டில்லி பாக்ஷா ராயரிடம் சில தூதர்களை விடுத்து தனக்கு 'நடக்கும் கீரைத்தண்டு' அனுப்பும்படி உத்திரவிட்டார். டில்லி பாக்ஷாவின் கட்டளையைக் கேட்ட இராயர், 'இது என்ன விபரீதம்!' பாக்ஷாவுக்கு 'நடக்கும் கீரைத்தண்டு' வேண்டுமாம். எங்கேயாவது கீரைத்தண்டு நடக்குமா? யாது செய்யலாம்? பாக்ஷாவின் கட்டளையை எவ்விதம் நிறைவேற்றுவது? என்று பலவாறு தனக்குள் சிந்தித்தார்.

கடைசியில் இராயர், அப்பாஜியை வரவழைத்து அவரிடம் டில்லி பாக்ஷாவின் கட்

ஊயை அறிவித்தார். டில்லி பாக்ஷாவின் ஆணையைச் செவியுற்ற அப்பாஜி, "அரசே, கவலைப்பட வேண்டாம். பாக்ஷாவின் உத்திரவுப் படி சீக்கிரத்தில் 'நடைக்கீரைத் தண்டு' அனுப்பு வோம்" என்று சொல்லி விடை பெற்றுச் சென்றார்.



அப்பாஜி என்ன செய்தார் தெரியுமா? அவர் ஒரு கட்டை வண்டியில் சுமார் மூன்றடி உயரத் துக்கு நல்ல மண்ணைச் சுமத்தி, கீரை விதைகளை விதைத்து தண்ணீர் ஊற்றி வந்தார். சீக்கிரத்தில் விதைகள் முளைத்துச் செழித்து வளர்ந்தன.

பிறகு அப்பாஜி இராயரிடம் அந்த வண்டி யைக் கொண்டுபோய்க் காட்டி, அதைப் பாக்ஷா வுக்கு அனுப்பும்படி சொன்னார். இராயரும் அள

வற்ற சந்தோஷமடைந்து, அந்த வண்டியை பாக்ஷாவுக்கு அனுப்பிவைத்தார். பாக்ஷாவும் அப்பாஜியின் யூகத்தை அறிந்து, அவரை மிகவும் மெச்சிக்கொண்டார்.

கேள்விகள்

1. டில்லி பாக்ஷா இராயருக்கு இட்ட கட்டளை என்ன? ஏன் அவ்விதக் கட்டளை இட்டார்?

2. அப்பாஜி டில்லி பாக்ஷாவின் உத்தரவை எவ்விதம் நிறைவேற்றினர்?

அப்பியாசம் 20

1. பிரித்தெழுது :—

1. நாடெங்கும், உத்திரவிட்டார், அளவற்ற, சந்தோஷமடைந்து.

2. இராயர் அப்பாஜியை வரவழைத்து, அவரிடம் டில்லி பாக்ஷாவின் கட்டளையை அறிவித்தார்.— இந்த வாக்கியத்தை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

3. இந்தப் பாடத்தில் எத்தனை பாராக்கள் இருக்கின்றன ; ஒவ்வொரு பாராவும் தெரிவிக்கும் முக்கிய விஷயம் என்ன ?

உதாரணம்:—1-வது பாரா—டில்லி பாஷா அப்பாஜி
யின் புத்தி நுட்பத்தைச் சோதிக்க
விரும்புதல்.

2-வது பாரா—டில்லி பாஷா நடக்கும்
கிரைத்தண்டு வேண்டுமென்று இராம
ருக்குக் கட்டளை இடுதல்.

3-வது பாரா—

4-வது பாரா

5-வது பாரா—

10. கடைக்குப் போதல்

சரக்கு	காலம்
மளிகைக்கடை	தவருமல்

என் தாயார் என்னைப் பார்த்து "கடைக்குப் போய் மூன்று ரூபாய்க்கு அரிசி வாங்கிக்கொண்டு வா" என்று சொல்லி, என்னிடம் மூன்று ரூபாய் கொடுத்தாள். நான் மூன்று ரூபாயையும் ஒரு சாக்கையும் எடுத்துக்கொண்டு மளிகைக் கடைக்குப் போனேன்.

நான் கடைக்காரனைப் பார்த்து, "ரூபாய்க்கு எத்தனை படி அரிசி? யென்று கேட்டேன். கடைக்காரன் "ரூபாய்க்கு ஐந்துபடி அரிசி" என்றான் நான் "மூன்று ரூபாய்க்கு அரிசி கொடு" என்றேன்.

உடனே கடையில் வேலை பார்க்கும் ஒருவன் ஒரு பெரிய வட்டமான முறத்தில் அரிசியைக்

கொண்டு வந்து கொட்டினன். படியை எடுத்து "ஒன்று, இரண்டு, மூன்று........." என்று இராகத்துடன் சொல்லிப் பதினைந்து படி அளந்து சாக்கில் போட்டுக் கட்டினன். நான் கடைக்காரனிடம் மூன்று ரூபாய் கொடுத்தேன்.



நான் அரிசி மூட்டையைத் தூக்கிப் பார்த்தேன். தூக்க முடியவில்லை. பதினைந்து படி அரிசியுள்ள மூட்டையை எப்படி என்னல் தூக்க முடியும்? ஆகையால் நான் ஒரு கூலியாளைக் கூப்பிட்டேன்.; அவனுக்கு அரையணு கூலி பேசி மூட்டையை வீட்டுக்குக் கொண்டுவரச் சொன்னேன். அவன் மூட்டையைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு என்னுடன் வந்தான். மூட்டையை எங்கள் வீட்டில் இறக்கினன். என் தாயார் அவனுக்கு அரையணு கூலி கொடுத்து அனுப்பினள்.

எங்கள் வீட்டுக்கு வேண்டிய கடைச் சாமான்களை நான் தான் வாங்கிக்கொடுப்பது வழக்கம். ஆனலும் காலம் தவருமல் சரியான நேரத்துக்குப் பள்ளிக்கூடம் போய்விடுவேன்.

கேள்விகள்

1. சிறுவன் எதற்காகக் கடைக்குச் சென்ருன் ?

2. ரூபாய்க்கு எத்தனை படி அரிசி ?

3. பையன் எத்தனை ரூபாய்க்கு அரிசி வாங்கினுன் ? எவ்வளவு வாங்கினுன் ?

4. பையன் அரிசி மூட்டையை எப்படி வீட்டுக்குக் கொண்டு போனுன் ?

அப்பியாசம் 21

நீ கடைக்குப் போய் ஓர் அணுவுக்குப் பழம் வாங்கிக் கொண்டு வந்ததாக நினைத்துக்கொள், அதைப்பற்றி ஏழு அல்லது எட்டு வாக்கியங்கள் எழுது.

அப்பியாசம் 22

கீழேயுள்ள படங்களைக் கவனித்துப் பார்த்து கதை எழுது. அந்தக் கதைக்கு நீ என்ன தலைப்புக் கொடுக்க விரும்புகிறாய் ?



11. உண்மை உரைத்த சிறுவன்

உண்மை	ஜோடுகள்
பொத்தான்	வெகுமதி
மேல் ஆடை	மேற்கு நோக்கி
மறுபடி	கதர் ஆடை
கோடி	கனவான்
மெய்	தோள்
எளிதில் அறிந்துகொள்வர்	பஞ்சவர்ணம்
பொருள்	கிழக்கு நோக்கி
அணிந்து	அடையாளம்
சாதாரண	வற்புறுத்தல்
	வந்தனம்

மாலை 5 மணியிருக்கும். ஒரு பெரியவர் ஒரு தெருவின் வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அவர் கதர் ஆடை உடுத்தி, ஜிப்பா அணிந்து நீண்டதோர் மேல் ஆடையைத் தோளின் மீது தரித்திருந்தார். அவர் கையில் ஒரு தடி இருந்தது. அதை அவர் அங்குமிங்குமாகச் சுழற்றிக்கொண்டே சென்றார்.


இப் பெரியார் நடந்துகொண்டிருந்த தெரு, கீழ் மேல் தெரு. அத்தெருவின் மேற்குக் கோடியில் ஒரு சிறிய பாடசாலை உண்டு. இப்பெரியவர் மேற்கி லிருந்து கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந் தார். அப்பொழுது ஒரு சிறுவன், கையில் புத்தங் களுடன் தரையை அங்குமிங்குமாக உற்றுப் பார்த்துக்கொண்டே மேற்கு நோக்கி வந்து கொண் டிருந்தான். அச் சிறுவனைக் காண்போர் யாவரும் ; சிறுவன் ஏதோ கெட்டுபோகவிட்ட பொருளைத்

தேடிக்கொண்டு போகிறான்' என்பதை எளிதில் அறிந்து கொள்வர்.

பெரியவர் பையனுக்கு எதிரே வந்ததும், அவனை நோக்கி, "பையா, நீ எதைத் தேடிக் கொண்டு போகிறாய்?" என்று கேட்டார். அதற்குப் பையன் ஐயா, என் பொத்தான்களில் ஒன்றைக் காணவில்லை. பள்ளிக்கூடம் முடிந்து நான் வீட்டுக்குத் திரும்பும்பொழுது அது சட்டையில் இருந்தது. வழியில்தான் அது எங்கோ விழுந்திருக்க வேண்டும். அதைத் தேடிக்கொண்டுதான் திரும்பி வருகிறேன்" என்றான்.

உடனே, பெரியவர் தம் ஜிப்பாவின் பையில் போட்டுவைத்திருந்த ஒரு தங்கப் பொத்தானை எடுத்துப் பையனிடம் காட்டி, "இது உன்னுடைய பொத்தானா?" பார். நான் இதை வழியில் இப்பொழுது தான் கண்டெடுத்தேன்," என்றார். பையன் அதைக் கண்டதும், "ஐயா அது என் பொத்தான் அன்று" என்றான். கனவான் "வேறு ஒரு வெள்ளிப் பொத்தான் தானே" என்று கேட்டார். பையன், "ஐயா, என் பொத்தான் தங்கப் பொத்தானும் அன்று, வெள்ளிப் பொத்தானும் அன்று. சாதாரணத் தந்தப் பொத்தான்," என்று சொன்னான். பிரபு மறுபடியும் தன் ஜிப்பாவின் பைக்குள் கையைப் போட்டு ஒரு தந்தப் பொத்தானை எடுத்துக் காட்டினார். பையன் உடனே, "ஆம் ஐயா! இது தான் என் பொத்தான். அதில் கட்டியிருக்கும் பஞ்ச வர்ண நூல்தான் அதற்கு அடையாளம். இத்துடன் கட்டியிருந்த இதுபோன்ற பொத்தா

னும் பஞ்சவர்ண நூலும் இதோ இருக்கின்றன பாருங்கள்,'' என்று சொல்லித் தன் சட்டையி லிருந்த பொத்தானையும் அதில் கட்டியிருந்த நூலை யும் அந்தப் பிரபுவினிடம் காட்டினான்.



பிரபுவும் தாம் கீழே கண்டெடுத்த தந்தப் பொத்தான் அப்பையனுடையதே என்று தீர்மா னித்துக்கொண்டார். பையன் பொய் சொல்லாமல் மெய் உரைத்ததால் பிரபு சந்தோஷம் கொண்டு அவனுடைய தந்தப் பொத்தானை அவனிடம் கொடுத்ததும் தவிர, தான் காண்பித்த தங்கப் பொத்தானையும் வெள்ளிப் பொத்தானையும் அவனுக்கு வெகுமதியாக அளித்தார். அச்சிறுவன்

பெரியாரின் வற்புறுத்தலின் மீது அவர் அளித்த வெகுமதியைப் பெற்றுக்கொண்டு, அவருக்கு வந்தனம் செலுத்தி வீடு நோக்கி நடந்தான்.

கேள்விகள்

1. சிறுவன் எதைக் கெட்டுப் போக்கினான்?
2. அவன் தொலைத்த பொத்தானை அவனுக்கு எடுத்துக் கொடுத்தது யார்?
3. பிரபு சிறுவனுக்கு என்னென்ன வெகுமதி கொடுத்தார்? ஏன்?

அப்பியாசம் 23

1. நான்கு திசைகளின் பெயர்களையும் எழுது.
2. கதர் ஆடை — இந்த இரண்டு சொற்களையும் சேர்த்து எழுது.
3. பிரபு கதர் ஆடை உடுத்தி, ஜிப்பா அணிந்து நீண்டதோர் மேல் ஆடையைத் தோள்களின் மீது தரித்திருந்தார்—இந்த வாக்கியத்தை மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.
4. கிழக்கு நோக்கி, தேடிக்கொண்டு, வெகுமதியாக, வந்தனம் செலுத்தி — இந்தத் தொடர்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.
5. படத்தில் காணப்படும் பையன் எவ்விதம் உடை உடுத்தி இருக்கிறான் என்பதைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

12. கண்ணுமூச்சி விளையாட்டு


விளையாடு	கேள்வி பிறந்தது
இல்லம்	ஒப்புக்கொள்
யோசனை	ஏகினர்
தீர்மானிக்கப்பட்டது	விளையாட்டு
ஒவ்வொருவரும்	வெவ்வேறு
அகப்பட்டாள்	தாய்ச்சி (தாச்சி)
ஒளி	ஒருவருக்கொருவர்
யோசி	கரங்கள்

ஒருநாள் சாயங்காலம் சில சிறுமிகள் கமலத்தின் வீட்டுத் திண்ணையில் ஒன்று கூடினர்கள். அவர்கள் என்ன விளையாட்டு விளையாடலாம் என்று யோசித்தார்கள். ருக்மணி ' கல்லா மண்ணு, விளையாடுவோம்'' என்ருள். கமலம், ''கண்ணுமூச்சி விளையாடுவோம்'' என்ருள். உடனே எல்லோரும் ''சரி, கண்ணுமூச்சி விளையாடுவோம்'' என்று சொல்லிக் குதித்தார்கள்.

கமலம், தாய்ச்சியாக இருக்க ஒப்புக்கொண்டாள். பிறகு, முதலில் யார் கண்களைப் பொத்திக் கொள்வது? என்ற கேள்வி பிறந்தது. ஒவ்வொருவரும் ''நான் மாட்டேன் நான் மாட்டேன்'' என்று கத்தினர்கள்.

உடனே தாய்ச்சியான கமலம் ''நான் ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். எல்லோரும் வலது கையை முன்னல் நீட்டிக்கொண்டு வரிசையாக நிற்க வேண்டும். நான் 'தணியுங்கள்' என்று சொன்ன

வுடன் கையைக் கீழே தணித்துவிட வேண்டும். எவள் கடைசியில் கையைத் தாழ்த்துகிருளோ அவள் முதலில் கண்ணைப் பொத்திக்கொள்ள வேண்டும்" என்று கூறினுள். இதனை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.



கமலத்தின் யோசனைப்படி, எல்லாப் பெண்களும் தங்கள் தங்கள் வலது கையை முன்னுல் நீட்டிக் கொண்டு வரிசையாக நின்ருர்கள். கமலம், "தணியுங்கள்" என்று உத்திரவிட்டாள். வேணியைத் தவிர மற்றச் சிறுமிகள் 'சட்' என்று கைகளைத் தணித்து விட்டார்கள். வேணி தான் முதலில் கண்களை மூடிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

கமலம் வேணியின் கண்களை இருகரங்களாலும் மூடிக்கொண்டு,

"கண்ணாமூச்சியாரே, காட்டுமூச்சியாரே,
எனக்கு ஒரு பழம், உனக்கு ஒரு பழம்
கொண்டு ஓடி வா"

என்று சொல்லும் பொழுதே மற்றச் சிறுமிகள் எல்லோரும் வெவ்வேறு திசையை நோக்கி ஓடி ஒளிந்தனர். பிறகு கமலம் வேணியை விடுத்தாள்; வேணி அங்குமிங்கும் ஓடித் தேடினாள். அவள் அங்குமிங்கும் தேடும்பொழுது ஒளிந்திருந்த சிறு பெண்கள் ஒவ்வொருவராக ஓடிவந்து கமலத்தைத் தொட்டார்கள். ஆனால், ஜயம் வேணியிடம் அகப் பட்டாள். ஆகையால், இந்தத் தடவை ஜயம் கண்களைப் பொத்திக்கொண்டாள்.

இவ்விதம் பெண்கள் எல்லோரும் உல்லாசமாக ஆறரை மணி வரையிலும் விளையாடினார்கள். பிறகு அவர்கள் ஒருவருக்கொருவர் விடை பெற்றுக் கொண்டு தம் தம் இல்லங்களுக்கு ஏகினர்.

கேள்விகள்

1. தாய்ச்சியாக இருந்தது யார்?
2. முதலில் வேணி கண்களை மூடிக்கொள்ள வேண்டும் என்பது எப்படித் தீர்மானிக்கப் பட்டது?

அப்பியாசம் 24

1. இரண்டு வாக்கியங்களையும் சேர்த்து ஒரு வாக்கிய மாக எழுது :—

கமலம் 'தணியுங்கள்' என்று உத்திரவிட்டாள். வேணியைத் தவிர மற்ற பெண்கள் 'சட்' என்று கைகளைத் தணித்து விட்டார்கள்.

2. தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது:- ஒவ்வொருவராக, ஒருவருக்கொருவர், யோசனைப்படி.


13. மரத்தில் தொங்கிய மாயாண்டி

ஓட்டி	இனிப்பாக	வரும்படி
ஆபத்து	ஜீவித்து	அப்பால்
அழகு வாய்ந்தது	முறிந்தது	அயலூர்
ஏராளமான	பிழைத்தது	பிறர் பொருள்

மாயாண்டி ஒரு குதிரைவண்டி வைத்திருந்தான். அவன் அந்த வண்டியை வாடகைக்கு ஓட்டி, அதன் மூலம் கிடைக்கும் வரும்படியைக் கொண்டு வாழ்ந்து வந்தான். அவனுடைய குதிரை மிகவும் அழகு வாய்ந்தது; அறிவுள்ளது; அவன் அதை 'நில்' என்றால் நிற்கும்; ஓடு என்றால் வேகமாக ஓடும்.

ஒரு நாள் மாயாண்டி தன் வண்டியில் ஏற்றிச் சென்ற மக்களை அயலூரில் விட்டுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். வழியில் சாலையின் ஓரமாக ஒரு மாந்தோப்பு இருந்தது. அதிலுள்ள மரங்களில் ஒன்று ரஸ்தாவின் ஓரமாக வளர்ந்திருந்தது. அதில் நிறைய மாம்பழங்கள் இருந்தன. மாயாண்டி அப்பழங்களைப் பறித்துத் தின்ன விரும்பினான்.

மாயாண்டி சுற்றிலும் பார்த்தான்- ஒருவரை யும் காணவில்லை. குதிரையை 'நில்' என்ருன். அது வும் நின்றது. பழங்களைப் பறிக்க அவன் வண்டிக் கூண்டின்மேல் ஏறினுன். ஒரு கிளையை ஒரு



கையால் எட்டிப்பிடித்தான். மற்ருெரு கையால் ஒரு பழத்தைப் பறித்தான்; அதைக் கடித்தான்; அது மிகவும் இனிப்பாக இருந்தது. 'ஒரு கூடை யோடு வந்திருந்தால் வீட்டிற்கும் ஏராளமான பழங்களைக் கொண்டு போகலாமே என்று சொல்ல நினைத்து "ஒரு கூடையோடு" என்று சொன்ஞன். "யோடு" என்ற வார்த்தையைக் கேட்டவுடன் குதிரை ஓட்டம் பிடித்தது.

மாயாண்டி கிளையைப் பற்றிக்கொண்டு மேலே தொங்கினன். தனக்கு நேர்ந்த ஆபத்தை உணர்ந்து 'நில்' என்று கத்தினன். சிறிது தூரத்துக்கு அப்பால் சென்று கொண்டிருந்த குதிரையும் நின்றது. வண்டி மாயாண்டிக்குக் கீழாக நின்ருல் அல்லவோ அவன் மரக்கிளையை விடமுடியும்?

மாயாண்டி என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருந்தான். அவன் பற்றியிருந்த கிளை 'படீர்' என்று முறிந்தது. அவன் 'தொப்' என்று கீழே விழுந்தான். உடம்பில் காயம் பட்டது. உடம்பைத் துடைத்துக்கொண்டு அவன் மெதுவாக எழுந்தான். நொண்டி நொண்டி நடந்து சென்று வண்டியில் ஏறிக்கொண்டான்; வண்டியை வீட்டை நோக்கி ஓட்டினன்.

பிறர் பொருள்மீது ஆசைப்பட்டதால் அல்லவோ மாயாண்டிக்குக் கஷ்டம் ஏற்பட்டது.

கேள்விகள்

1. மாயாண்டி எப்படிப் பிழைத்து வந்தான்?
2. மாந்தோப்பைக் கண்ட மாயாண்டி என்ன செய்தான்?
3. 'ஒரு கூடையோடு' என்று அவன் சொன்னதும் என்ன நேர்ந்தது? ஏன்?
4. மாயாண்டி ஏன் கீழே விழுந்தான்?

அப்பியாசம் 25

1. கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை அமைக்க:—

மாயாண்டி——வைத்திருந்தான். அவனுடைய குதிரை——அறிவுள்ளது, 'நில்' என்றால்——'ஓடு'——ஓடும். ஒரு நாள் அவன் தன் வண்டியில் வீட்டுக்கு——, ——ஒரு மாமரம்——அவன்——பறிக்க வண்டியை——கூண்டின் மீது——, 'கூடையோடு' என்று——குதிரை ஓடியது. மரக்கிளை——மாயாண்டி 'தொப்'——கீழே——,


2. இப் பாடத்தில் வந்துள்ள ஆறு பெயர்ச் சொற்களை எழுது:—

14. பானைக்குள் தலையை புகுத்திய நாய்

இறந்து கிடந்தது	கொஞ்சங் கொஞ்சமாக
(கால்களால்) பற்றி	ஏற ஏற
பறிக்க	முயலவில்லை
மறித்து	புரண்டு
நேர் கீழே	பாறை
முற்றம்	அரவம்
போராடிக்கொண்டு	துவாரம்
வருத்தத்துடன்	அனுகூலமாக
மோதுண்டது	அதிருஷ்டம்
உடைந்தது	தொடங்கிற்று
விடுதலை	பின்தொடர்ந்து
நீந்தி	சந்தித்து
மோப்பம்	இனத்தார்
சக்தி	விரோதி
முயற்சி	கூட்டத்தார்
எத்தனித்தது	வெருட்டி
உருட்டி	உதவி
பேராசை	சகோதரன்
முயன்றது	காவல்
பயன்	கெஞ்சிக்கேட்டது
பரிதபித்துக்கொண்டு	காரியம்
தொந்தரவு	முறையிடும்
விசனத்துடன்	உழைக்க
கடந்து	

நடுத்தெருவில் ஓர் எலி இறந்து கிடந்தது. ஒரு காகம் அதைக் கால்களால் பற்றித் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தது.

அக் காகத்தை ஒரு பருந்து பார்த்தது. அது எலியைக் காகத்தினிடமிருந்து பறிக்க விரும்பியது; காக்கையை மறித்து, அதனுடன் சண்டை போட்டது.




காகமும் பருந்தும் சண்டையிட்டுக் கொண்டிருந்த இடத்துக்கு நேர்கீழே, ஒரு வீட்டின் முற்றத்தில் ஒரு மண் பானை இருந்தது. இரு பறவைகளும் போராடிக் கொண்டிருக்கையில் எலி கீழேயுள்ள மண் பானைக்குள் 'தொப்' என்று விழுந்தது. இதைக் கண்ட காகமும் பருந்தும், கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லையே, என்று நினைத்து வருத்தத்துடன் பறந்து சென்றன.

மண் பானை இருந்த இடத்திற்கு ஒரு நாய் வந்தது. நாய்க்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிக மல்லவா? அது மோப்பம் பிடித்துக் கொண்டே பானையின் அண்டையில் வந்தது. பானைக்குள்

எலி கிடப்பதை அறிந்து அதை எடுக்க முயற்சி செய்தது. பானையின் கழுத்துக் குறுகியிருந்தது. நாய் பானையை உருட்டி எலியை எடுக்க எத்தனித்தது; அவ்வாறு செய்ய அதனல் முடியவில்லை. அது பேராசை கொண்ட நாய். எப்படியாவது எலியை அடைய வேண்டுமென்று அது விரும்பியது. தன் தலையைப் பானைக்குள் நுழைத்து, அப்படியும் இப்படியுமாக அசைத்தது. தலையும் பானைக்குள் புகுந்தது. நாய் எலியை வாயில் கௌவிக் கொண்டது. தலையை நுழைக்கவே மிகவும் சிரமப்பட்டதே! அப்படியிருக்க எலியையும் கௌவிக் கொண்டு தலையை எப்படி வெளியே இழுக்க முடியும்? நாய் எவ்வளவோ முயன்றது; பயன்படவில்லை. என்ன செய்யும்? தலையை வெளியே எடுக்க முடியாமல் பரிதபித்துக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் அவ்வீட்டிலுள்ளோர்களில் சிலர் அங்கே வரலாயினர். அவர்கள் வரும் ஓசை




கேட்டு நாய் பானையுடன் ஓட்டம் பிடித்தது. வழியிலுள்ளோர் இதைக் கண்டு கைக்கொட்டி சிரித்தனர். சிறுவர் சிலர் நாயின் பின்னே ஓடினர். கற்களைப் பொறுக்கி வீசினர். கற்களில் ஒன்று பானையின் மீது தாக்க, அதில் ஒரு துவாரம் ஏற்பட்டது. பானை முழுவதும் உடைந்

திருக்கக் கூடாதா? என்ன செய்வது, நாய்க்கு அதிர்ஷ்டமில்லை.

ஆனால், இப்பொழுது நாய் துவாரத்தின் வழியாகப் பார்க்க முடிந்தது. ஆகையால் அது வேகமாக ஓடத் தொடங்கிற்று. பின் தொடர்ந்து சென்ற சிறுவர்களும் நின்று விட்டனர்.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு, நாய் ஒரு பூனையைச் சந்தித்தது. அது பூனையைப் பார்த்து, "பூனையாரே, பூனையாரே, தயவு செய்து என் தலை மீதுள்ள பானையை எடும்" என்று சொல்லியது.


பூனை நாயைப் பார்த்து, "ஐயா, நாயாரே, நீர் எங்கள் இனத்தாரின் விரோதி. எங்களைக்கண்டால் நீரும் உங்கள் கூட்டத்தாரும் சும்மாயிருப்பதில்லை. வெருட்டிப் பிடிக்க வருகிறீர்கள். ஆகை



யால் நான் உமக்கு உதவி செய்ய முடியாது' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டது.

நாய் மிகுந்த வருத்தத்துடன் மேலும் நடந்து சென்றது. வழியில் அது ஒரு வெள்ளாட்டைச் சந்தித்தது. நாய் ஆட்டை நோக்கி, "ஆடே, ஆடே வெள்ளாடே! நான் உன் நண்பன் அல்லவா? உன் குட்டிகளை நரி தூக்கிக்கொண்டு போகாமல் என் சகோதரன் காவல் காக்கிறான் அல்லவா? நீ என் தலையில் சிக்கியுள்ள பானையை எடு" என்று கெஞ்சிக் கேட்டது.

ஆடு, "ஐயா நாயாரே, இது என்னுல் முடியாத காரியம். என்னை மேய்க்கும் பையனிடம் சென்று முறையிடும். அவன் உதவி புரியக் கூடும்" என்றது.



பையன் ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டிருந்தான். நாய் அவனிடம் சென்று, "பையா, பையா, என் சகோதரன் உன் வீட்டையும் ஆட்டுக்குட்டிகளையும் காக்கிருன் அல்லவா? அதுபோல நானும் உனக்கு உழைக்கத் தயாராக இருக்கிறேன். தயவு செய்து என் தலைமேல் இருக்கும் பானையை எடு" என்று வேண்டிக்கொண்டது.



பையன், "நாயே நீ சில சமயங்களில் மனிதரைக் கடித்துத் தொந்தரவு செய்கிருய். நான் உன்னை என் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனுல், உனக்கும் உன் சகோதரனுக்கும் சண்டை வரும். உதவி புரியும் என்னையே நீ கடித்தாலும் கடிப்பாய். நான் உன் சொல்லை நம்பமாட்டேன். இங்கே நில்லாதே, ஓடிப்போ" என்று சொல்லி துரத்தி விட்டான்.

நாய் மிகுந்த விசனத்துடன் மேலும் நடந்து சென்றது. வழியில் ஒரு நீரோடை குறுக்கிட்டது. நாய் அதைக் கடந்து அக்கரையை அடைய நினைத்துத் தண்ணீரில் இறங்கியது. தண்ணீர் பானைக்குள் கொஞ்சம் கொஞ்சமாக ஏறியது. பானையில் தண்ணீர் ஏற ஏறப் பானையைத் தூக்க நாயினால் இயலவில்லை.



ஓடை நீர் பானையை உருட்டத் தொடங்கியது. பானையும் உருண்டது. நாயும் உருண்டது. பானையும் நாயும் உருண்டு புரண்டு சென்று கொண்டிருந்தன. வழியில் ஒரு பாறை இருந்தது. பானை பாறையில் மோதுண்டு, 'படார்' என்று உடைந்தது. நாய் விடுதலை அடைந்து, தப்பினேன், பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டு அது நீந்திக் கரை ஏறியது.



நாயும் பிழைத்தது, கதையும் முடிந்தது.

கேள்விகள்

1. நாய் பானைக்குள் ஏன் தலையை நுழைத்தது?
2. நாய்க்குத் தலையை ஏன் வெளியில் எடுக்க முடியவில்லை?
3. பானையுடன் ஓட நாய்க்கு எவ்விதம் வழி தெரிந்தது?

4. பூனை ஏன் நாய்க்கு உதவ மறுத்தது ?

5. கடைசியில் பானை எவ்விதம் உடைந்தது ?

அப்பியாசம் 26

நாய் என்ன செய்தது? —ஓடியது

சிறுவர்கள் என்ன செய்தார்கள்?—சிரித்தார்கள்.

ஓடியது என்ற வார்த்தை நாய் செய்த வேலையைத் தெரிவிக்கிறது.

சிரித்தார்கள் என்ற வார்த்தை பையன்கள் செய்த செய்கையைத் தெரிவிக்கிறது.

இவ்விதம் செய்கையைத் தெரிவிக்கும் சொற்களுக்கு வினைச்சொற்கள் என்று பெயர்.

கீழ்க் கண்ட வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களைக் குறிப்பிடு :

1. காகம் ஆகாயத்தில் பறந்தது.

2. ஒரு பருந்து காகத்தைப் பார்த்தது.

3. பருந்து காகத்துடன் சண்டை போட்டது.

இப்பாடத்தில் வந்துள்ள வினைச்சொற்களில் ஏதாவது பத்து வினைச் சொற்களை எழுது.

15. சர்க்கஸ்

சர்க்கஸ்	சாரதி	தடுக்கப்பட்ட
ஆஹா	கம்பீரமாக	பயமுறுத்தி
தானம்	கரகோஷம்	இஷ்டம்போல்
டமாரம்	அப்புறம்	நெருப்பு
புல்லாங்குழல்	சவாரிசெய்	வளையம்
சலங்கை	துஷ்டமிருகங்கள்	பாய்ந்தது
ஒலித்தன	கூடாரம்	சிறுமி

சாமி : மணி, நேற்றுச் சாயங்காலம் எங்கே போயிருந்தாய்? வீட்டில் உன்னைக் காண வில்லையே?

மணி : நான் என் மாமாவுடன் சர்க்கஸ் பார்க்கப் போனேன்.


சாமி : ஆஹா! அப்படியா, சர்க்கஸில் என்ன வேடிக்கைகள் காட்டினார்கள்?

மணி : முதலில் ஒரு யானை வந்தது. அது உட்கார்ந்து கொண்டு பாட்டுக் கச்சேரி நடத்தியது.


சாமி : யானை எப்படி பாட்டுக் கச்சேரி நடத்தியது?

மணி : அது முன்னங்கால்களால் தாளம் போட்டுக் கொண்டு, வாலால் டமாரம் அடித்துக் கொண்டு, துதிக்கையால் புல்லாங்குழல் வாசித்தது. யானை தாளம் போடும்பொழுது, அதன் முன்னங்கால்களில் கட்டியிருந்த சலங்கைகள் 'கலீர், கலீர்,' என்று ஒலித்தன

சாமி: வேறு என்ன வேடிக்கை பார்த்தாய்!



மணி: ஒரு சிறிய கோச்சு வண்டியில் ஒரு ஆட்டைப் பூட்டிக்கொண்டு வந்தார்கள். வண்டியைச் சாரதி போல் ஒரு குரங்கு ஓட்டியது. எஜமானக் குரங்கு வண்டியில் கம்



பீரமாக உட்கார்ந்து கொண்டிருந்தது. வேலைக்காரக் குரங்கு வண்டியின் பின் புறமுள்ள பலகையில் நின்று கொண்டிருந்தது.

சாமி: ஏய்! இது மிகவும் வேடிக்கையாக இருக்கிறதே?

மணி: ஆம்; குரங்கு, ஆடு பூட்டிய கோச்சு வண்டியில் சவாரி செய்வதைப் பார்த்து எல்லோரும் கரகோஷம் செய்தனர்.


சாமி : அப்புறம்?

மணி : ஒரு சிங்கத்தின் மீது ஒருவன் ஏறிச் சவாரி செய்தான்.

சாமி : சிங்கம் ஜனங்களை அடித்துக் கொன்று விடாதா?

மணி : அது நாமிருந்து வேடிக்கை பார்க்கு மிடத்துக்கு வர முடியாது.

சாமி : ஏன்?



மணி : சிங்கம், புலி கரடி முதலிய துஷ்ட மிருகங்களைக் கூடாரத்தின் ஒரு புறத்தில் இரும்பு வேலி சூழ்ந்த ஓரிடத்திற்கு கொண்டு வந்து வேடிக்கை காட்டுகிறார்கள். ஆகையால், அவை வேடிக்கை பார்க்கிறவர்களை ஒன்றும் செய்ய முடியாது. அவைகளைக்கொண்டு வேடிக்கை காட்டுகிறவர்கள் கையில் நீண்ட சாட்டையை வைத்துக்கொண்டே நிற்கிறார்


கள். அவர்கள் சொல்லுகிறபடி அவை செய்யாவிட்டால், சாட்டையால் 'பளிச், பளிச்' என்று கீழே அடித்து, அவைகளை பயமுறுத்தித் தம் இஷ்டம்போல் நடக்கும்படி செய்கிறார்கள்.

சாமி: புலி என்ன வேடிக்கை செய்தது?

மணி: புலி ஒரு நெருப்பு வளையத்திற்குள்ளாகப் பாய்ந்தது.

சாமி: வேறு என்ன பார்த்தாய்?

மணி: இரண்டு சிறுமிகள் ஒரு கம்பியின் மீது கையில் குடை பிடித்துக்கொண்டு நடந்து சென்றார்கள். கம்பியின் மேலாகவே சைக்கிளும் ஓட்டினார்கள்.



சாமி: கீழே விழவில்லையா?

மணி: இல்லை, சாமி, இன்னும் பல வேடிக்கைகளும், காட்டினார்கள். நீ கட்டாயம் போய்ப் பார்.

சாமி: ஆகட்டும்; இன்று என்னை அழைத்துப் போகும்படி நான் என் தகப்பனாரைக் கேட்கிறேன். மணி, நேரம் ஆகிறது; போய் வருகிறேன், வந்தனம்.

மணி: சரி, போய் வா, வந்தனம்.

கேள்விகள்

1. யானை எப்படி பாட்டுக் கச்சேரி நடத்தியது ?
2. கோச்சு வண்டியை இழுத்துச் சென்றது எது ?
3. இரண்டு சிறுமிகள் செய்த வேடிக்கைகள் என்ன ?
4. வேடிக்கை பார்க்கும் இடத்துக்குத் துஷ்ட மிருகங்களை எப்படிக் கொண்டு வருகிறார்கள்? ஏன் ?

அப்பியாசம் 27

1. சர்க்கஸில் காட்டும் வேடிக்கைகளில் ஏதாவது ஒன்றைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. ஐந்து பெயர்ச் சொற்கள், ஐந்து வினைச் சொற்கள் இவைகளை எழுது.

சிறிய கோச்சு வண்டி, பெரிய கோச்சு வண்டி.

சிறிய, பெரிய என்ற இரண்டு வார்த்தைகளும் ஒரே அர்த்தமுடையவை அல்ல, அவை எதிரான அர்த்தமுள்ளவை; சிறிய என்ற வார்த்தை பெரிய என்ற வார்த்தையின் எதிர் வார்த்தை அல்லது எதிர்ப்பதம். × இந்த அடையாளம் எதிர்ப்பதம் என்பதைக் குறிக்கிறது.

சிறிய × பெரிய
பெரிய × சிறிய
உயர்ந்த × தாழ்ந்த

கீழ்க்கண்ட வார்த்தைகளின் எதிர்ப்பதங்களை எழுது:—

பின்புறம், ஏறி, நீண்ட, கீழே, சென்றார்கள்.

அப்பியாசம் 28

கீழ்க்கண்ட வார்த்தைகளைச் சரியான இடங்களில் அமைத்து எழுது:—

வேடிக்கையாக	உல்லாசமாக
அன்பாக	கம்பீரமாக
வேகமாக	மெதுவாக
அலறிக்கொண்டு	வெகுமதியாக
வழியாக	வரிசையாக

1. குரங்கு, வண்டியில்———உட்கார்ந்திருந்தது.

2. நாய்———— ஓடத் தொடங்கிற்று.

3. மாயாண்டி வண்டியில்———ஏறினான்.

4. எல்லோரும் கைகளை முன்னால் நீட்டிக் கொண்டு———நிற்கவேண்டும்.

5. எல்லாப் பெண்களும், ஆறரை மணி வரையிலும்———விளையாடினார்கள்.

6. பிரபு சிறுவனுக்கு ஒரு தங்கப் பொத்தானை ———அளித்தார்.

7. தெனாலிராமன் செய்யும் ஒவ்வொரு செய்கையும்———இருக்கும்.


8. மாவுத்தன் யானையைக் கடைத் தெருவில் —— நடத்திச் சென்றான்.

9. பிரபு ஏழைகளிடம்———இருந்தார்.

10. குரங்கு வலி பொறுக்கமாட்டாமல்——— ஓடிற்று.

அப்பியாசம் 29


கீழேயுள்ள படங்களைக் கவனித்து ஒரு கதை எழுது: கதைக்கு உனக்கு விருப்பமான தலைப்புக் கொடு.



16. கட்டை வண்டி

முரட்டு	இணைக்கப்பட்டு	பிரயாணம்
பாரம்	நெகிழவிட்டு	பாரவண்டி
அலகு	துன்புறுத்துவது	பொழுது புலர்ந்தது
இருப்புச் சட்டம்	இளைப்பாறு	திடுக்கிட்டான்
மூக்குச் சரடு	களைப்பாறு	வாயில்லாப்பிராணி

ரஸ்தாவின் வழியாக ஒரு கட்டை வண்டி போய்க் கொண்டிருக்கிறது. வண்டியை இரண்டு



காளைகள் இழுத்துச் செல்கின்றன. அவை முரட்டுக் காளைகள்; மிகவும் பலமுள்ளவை; ஆயினும் மெதுவாகத்தான் நடக்கின்றன. ஏன் தெரியுமா? வண்டியில் நெல் மூட்டைகள் ஏற்றப்பட்டிருக்கின்றன.

வண்டியில் அதிகமான பாரம் இருப்பதால் காளை கள் மெதுவாகச் செல்கின்றன.

வண்டியும் மிகவும் உறுதியானது. அதிக பாரத்தை வண்டியில் ஏற்ற வேண்டியிருப்பதால், அது உறுதியாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதன் இரண்டு சக்கரங்களும் பெரியனவாயும் உறுதியாக வும் இருப்பதைக் கவனி. ஒவ்வொரு சக்கரத்தைச் சுற்றிலும் கனத்த இரும்புப்பட்டா, போட்டிருக் கின்றனர். இரும்புப்பட்டா, சக்கரத்தின் ஆரங் களைச் சேர்த்துப் பிடித்து கொள்கிறது. அதைக் 'கட்டு' என்பார்கள். சக்கரத்தின் மத்தியிலுள்ள குடத்திலிருந்து கால்கள் பிரிந்துசெல்வதைக் கவனி. கால்களை 'இலைகள்' என்று சொல்வது வழக்கம். ஒவ்வொரு சக்கரத்திலும் எத்தனை அலகுகள் இருக் கின்றன என்று எண்ணிப்பார்.

வண்டிக்காரன் வண்டியின் முன்பாகத்தில் இரும்புச் சட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருக் கிறன். அவன் இடது கையில், மாடுகளின் மூக்குச் சரடுகளுடன் இணைத்தக் கயிறுகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறன். அவன் கயிறுகளைப் பிடித்து இழுத்தால் மாடுகள் நிற்கும். கயிறுகளை நெகிழ விட்டு 'ஹை' என்று அதட்டினல் மாடுகள் நடக்க ஆரம்பிக்கும். அவன் வண்டியை இடது புறம் திருப்ப என்ன செய்வான்? வலது புறம் திருப்ப என்ன செய்வான் ?

வண்டிக்காரன் தனது வலது கையில் ஒரு சாட்டை வைத்திருக்கிறன். அதன் ஒரு முனையில்

தார் முள் இருக்கிறது. சாட்டைக் கோலில் தோல் வார் கட்டப்பட்டிருக்கிறது. வண்டிக்காரன் சில சமயங்களில் சாட்டையால் மாடுகளை அடிப்பதுண்டு. வாயில்லாப் பிராணிகளை அவ்விதம் அடித்து துன்புறுத்துவது மிகவும் பாவம்.

இந்த வண்டிக்காரன் ஒரு கிராமத்திலிருந்து தூரத்திலுள்ள ஒரு பட்டணத்திற்கு நெல் மூட்டைகளை வண்டியில் கொண்டு போகிறான். பசிக்கும் பொழுது, ஓரிடத்தில் சிறிது நேரம் தங்கி உண்டு இளைப்பாறுவான். அப்பொழுது காளைகளும் களைப்பாறும். இவன் இரவிலும் பிரயாணம் செய்வான். வண்டியின் இரும்புச் சட்டத்தில் உட்கார்ந்து கொண்டே இவன் தூங்குவான். அப்பொழுது மாடுகள் மெதுவாக நடந்து சென்று கொண்டிருக்கும்.

ஒரு சமயம் ஒரு பார வண்டிக்காரன் இரவில் வண்டியில் தூங்கிக்கொண்டே போனான். காளைகளும் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தன. பின்னால் ஒரு மோட்டார் கார் வந்தது. மோட்டார் கார் டிரைவர், பல தடவை 'ஹாரன்' அடித்தும் வண்டிக்காரன் விழித்துக் கொள்ளவில்லை. உடனே 'டிரைவர்' கோபங்கொண்டு மோட்டாரை விட்டு இறங்கி வந்தான். வண்டியை மெதுவாக, அது போய்க்கொண்டிருந்த திசைக்கு எதிர்த் திசையை நோக்கித் திருப்பிவிட்டுத் தான், தன் மோட்டாரில் ஏறிச் சென்றான். பொழுது புலர்ந்தது. வண்டிக்காரன் கண் விழித்துப் பார்த்தான். வண்டி தன் வீட்டு வாசலில் திரும்பவும் வந்து நிற்பதைக்

கண்டுத் திடுக்கிட்டான். வண்டி எவ்விதம் தன் வீட்டை நோக்கித் திரும்பியது என்று அவன் இன்னும் யோசித்துக் கொண்டிருக்கிறான்.

கேள்விகள்

1. வண்டிச் சக்கரங்கள் எவ்விதம் செய்யப்பட்டிருக்கின்றன ?
2. வண்டிக்காரன் வண்டியில் தூங்கிக் கொண்டே போகும் பொழுது என்ன நேர்ந்தது ?

அப்பியாசம் 30

1. வண்டியில் அதிகமான பாரம் ஏற்றப்பட்டிருப்பதால் காளைகள் மெதுவாகச் செல்லுகின்றன. இந்த வாக்கியத்தை இரண்டு தனி வாக்கியங்களாக பிரிக்க.

2. வண்டிக்காரன் காலகளின் தலைக்கயிறுகளைப் பிடித்து இழுத்தால்,——————(கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை இட்டு நிரப்புக.)

3. தூரத்திலுள்ள.— இரண்டு வார்த்தைகளாக பிரிக்க.

4. வண்டிக்காரன் இருப்புச் சட்டத்தில் உட்கார்ந்து கொண்டே தூங்குவான். அப்பொழுது மாடுகள் மெதுவாக நடந்து சென்று கொண்டிருக்கும். இந்த இரண்டு வாக்கியங்களையும் ஒன்று சேர்த்து எழுது.

5. சொந்த வாக்கியங்களில் உபயோகிக்க:—
பல தடவை, மோசி, இளைப்பாறு, ஆயினும்.

அப்பியாசம் 31

முதல் பத்தியிலுள்ள ஒவ்வொன்றுடனும் இரண்டாவது பத்தியிலுள்ளவைகளில் எதைச் சேர்த்தால் வாக்கியம் ஆகும்? அவற்றைச் சேர்த்து சரியான வாக்கியங்களை எழுது.

	முதல் பத்தி	இரண்டாவது பத்தி
1.	குடியானவன்	கரும்பைப் பிரியமாகத் தின்னும்.
2.	பையன்கள்	ஒழுங்காக பள்ளிக்கூடம் வருகிறார்.
3.	எலி	நமக்குப் பால் கொடுக்கிறது.
4.	யானை	பொறியில் அகப்பட்டது.
5.	ரயில்	என் சிநேகிதனை வழியில் சந்தித்தேன்.
6.	உபாத்தியாயர்	ரஸ்தாவின் வழியாகப் போகிறது.
7.	ராமன்	திடீரென்று நின்றது.
8.	வண்டி	வயலை உழுது கொண்டிருக்கிறான்.
9.	பசு	பாடம் கற்பிக்கிறார்.
10.	நான்	பாடசாலையில் கல்வி கற்கிறார்கள்.

அப்பியாசம் 32

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை அமைத்து எழுது:—

1. ஒரு கன்றுக்குட்டியும் வெள்ளாடும்——— (வந்தது, வந்தன)

2. நான் அந்தப் பையனைப்———(பார்த்தேன், பார்த்தான்)

3. புத்தகம் மேஜையின்மேல்———(இருக்கிறது, இருக்கின்றன)

4. என் தாயார் என்னிடம் மூன்று ரூபாய் ———(கொடுத்தான், கொடுத்தாள்)

5. பையன் தெருவில்———(விளையாடுகிறுள், விளையாடுகிறுன், விளையாடுகிறுர்கள்)

6. நீ நேற்று அவனை ——— ? (சந்தித்தேன், சந்தித்தாய், சந்தித்தாயா)

7. அவன் நாளை ———(புறப்படுவான், புறப்பட்டான்)

8. அவர்கள் ஸ்டேஷனுக்குப் ———(போகிறுன், போகிறுர்கள்)

9. பறவைகள் ஆகாயத்தில்———(பறக்கிறது, (பறக்கின்றன, ஓடுகிறது)

10. இராமன் என்னுடன் கடைக்கு——— (வந்தான், விளையாடினுன்)

17. யானையை வென்ற ஆமை

கடிந்து	மத்தியஸ்தம்	முனை
சைகை	உற்சாகம்	ஆரவாரித்தான்
ஆச்சரியம்	ஜயித்தது	தோற்றது
பலவாறு	வென்றது	தடாகம்
மொண்டு	அட்டகாசம்	தலைவன்
பரிவாரங்கள்	தாமதமின்றி	கணம்
அற்பப்பயல்	பகர்ந்து	பரிகாசம்
பந்தயம்	கேவலம்	அடவி

ஒரு காட்டில் ஒரு குளம் இருந்தது. அதில் பல ஆமைகள் சந்தோஷமாக வசித்து வந்தன. ஒரு நாள் அந்த வனத்திலுள்ள யானைகள் கூட்டமாக அத்தடாகத்திற்கு வந்தன. அவை கரையிலுள்ள மரம், செடி, கொடிகளை முறித்துத் தின்றன. ஒடித்து அங்குமிங்கும் வீசின. குளத்தில் இறங்கித் தண்ணீரைத் துதிக்கையால் உறிஞ்சி, வாயில் ஊற்றிக் குடித்தன. பிறகு தண்ணீரைத் துதிக்கையில் மொண்டு, ஒன்றின் மீது ஒன்று வாரி ஊற்றி விளையாட ஆரம்பித்தன; தண்ணீரில் அங்குமிங்கும் சென்று நீரைக் கலக்கிச் சேறாக்கின.

யானைகளின் அட்டகாசத்தைக் கண்ட ஆமைகள் திடுக்கிட்டு, என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தன. கடைசியில் அவை ஒன்று கூடித்

தங்கள் தலைவனான மந்த ராஜனிடம் சென்று முறையிட்டன.



மந்த ராஜன் தன் இருப்பிடத்தை விட்டு வெளியே வந்து, யானைகளின் தலைவனைப் பார்த்து "யானை அரசே! நீரும் உமது பரிவாரங்களும் நாங்கள் வசிக்கும் தடாகத்திற்கு வந்து, இவ்விதம் அட்டகாசம் செய்வது முறையாகாது; உங்களுடைய அட்டகாசத்தால்தான் இனத்தாருள் பலருடைய கால்கள் முறிந்தன; மேல் ஓடுகள் சரிந்தன. பலர் உயிரை இழந்தனர். ஆகையால், தாமதமின்றி உமது பரிவாரங்களும் நீரும் இத்தடாகத்தை விட்டு வெளியேறிச் செல்லவேண்டும். இனி ஒரு

கணமும் இங்கே நிற்கலாகாது" என்று கடிந்து பேசியது.

ஆமை அரசன் சொல்லைக் கேட்ட யானை மிகக் கோபங்கொண்டு, "ஏ அற்பப்பயலே! நீ யாரடா என்னைக் கேட்பது? என் பாதத்தின் அளவுகூட இல்லாத நீயா என்னை அதட்டிப் பேசுகிறாய். இதோ பார், உன்னை ஒரு நொடியில் நசுக்கிக் கொன்று விடுகிறேன்" என்று கூறிக் காலைத் தூக்கி ஓர் அடி அடித்தது.

ஆமை சட்டென்று விலகி நின்று, கல, கல வென்று சிரித்தது. "ஏ, யானையே, நீ மலை போல் இருப்பினும் எனக்குள்ள பலம் உனக்கு ஏது? வேண்டுமானால் ஒரு பந்தயம் வைத்துக் கொள் வோம்". என்று பகர்ந்து பரிகாசம் செய்தது. ஆமை பந்தயத்திற்குக் கூப்பிட்டபொழுது யானை 'முடி யாது' என்றால் கேவலம் அல்லவா? ஆகையால், யானையும் பந்தயத்திற்கு ஒப்புக்கொண்டது. பந்த யத்தை நடத்த ஒரு தினத்தையும் அவை குறிப்பிட் டுக்கொண்டன. இச்செய்தி நாடு எங்கும் பரவியது.

குறிப்பிட்ட தினத்தில் அடவியிலுள்ள மிருகங் களும் பறவைகளும் மற்றுமுள்ள பிராணிகளும் குளக்கரையண்டை வந்து கூடிவிட்டன. மிருக ராஜனாகிய சிங்கம் மத்தியஸ்தனாக இருக்க இசைந் தது. அது 'எவ்விதமான பந்தயம் வைக்கலாம்,' என்று யோசித்தது. ஒரு தடித்த கயிற்றின் ஒரு முனையை யானை துதிக்கையால் பிடித்துக்கொள்ள

வேண்டும் என்றும். மற்ரெரு முனையை ஆமைதன் வாயில் பற்றிக்கொள்ள வேண்டும் என்றும் யானை தரையில் நின்றும் ஆமை தண்ணீரில் மூழ்கியும் கயிற்றை இழுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

இத்தீர்மானத்தின்படி யானை குளக்கரையின் மீது தயாராக நின்றது. ஆமை தண்ணீரில் மூழ்கிக் கொண்டது. குறிப்பிட்ட சைகை காட்டப்பட்ட வுடனே கயிறு இழுக்கப்பட்டது. அங்கே கூடி யுள்ள பிராணிகளில் சில யானையை உற்சாகப்படுத் தின. மற்றும் சில ஆமைக்கு உற்சாக மூட்டின. வேறு சில ஒரு சமயம் யானையையும் மற்ரெரு சம யம் ஆமையையும் உற்சாகப்படுத்தி ஆரவாரித்தன. கயிறு விறைப்பாக இருந்தது. எல்லாப் பிராணி களும் ஆச்சரியத்துடன் இமை கொட்டாமல் விழித் துக்கொண்டிருந்தன. அச்சமயத்தில் கயிறு 'படார்' என்று அறுந்தது. யானை 'தொப்' என்று தரையில் வீழ்ந்தது. ஆமை அறுந்த கயிற்றை வாயில் கௌவிக் கொண்டு கரைக்கு வந்தது.

ஆமை ஜயித்தது என்றும் யானை தோற்றது என்றும் முடிவு செய்யப்பட்து- யானை வெட்கம் அடைந்து ஓடி ஒளிந்தது. மற்றப் பிராணிகளும் பலவாறு பேசிக்கொண்டு தத்தம் இருப்பிடங் களுக்குச் சென்றன. அது முதல் ஆமைகள் அந்தத் தடாகத்தில் வெகு உல்லாசமாகக் காலங் கழித்து வந்தன.

ஆமை எவ்விதம் யானையை எதிர்த்து நின்றது? யானைக்குள்ள பலம் ஆமைக்கு உண்டா? இல்லை.

ஆமை தந்திரத்தால் தான் யானையை வென்றது. ஆமை தண்ணீரில் மூழ்கியதும் அங்கே கரையோரமாக வளர்ந்திருந்த தடித்த ஒரு வேரில் கயிற்றை முடிந்துவிட்டது. கயிறு அறுந்ததும் முடிச்சை அவிழ்த்துக் கொண்டு வெளியே வந்தது. ஆமை செய்த தந்திரம் யானைக்காவது மற்றப் பிராணிகளுக்காவது இது வரையில் தெரியாது.

கேள்விகள்

1. குளத்தில் வசித்து வந்த ஆமைகளுக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டது?
2. மந்தராஜன் யானைகளின் அரசனிடம் என்ன சொல்லிற்று?
3. மந்த ராஜனுக்கும் யானை அரசனுக்கும் எவ்வித மான பந்தயம் வைத்தார்கள்?
4. பந்தயத்தில் ஆமை எவ்விதம் வென்றது?

அப்பியாசம் 33

1. ஒவ்வொரு சொல்லுக்கும் அதே அர்த்தமுள்ள வார்த்தைகள் சிலவற்றைக் கண்டுபிடித்து எழுது:

குளம்	நொடித்து
காடு	சொல்லி
முறித்து	தடாகம்
தண்ணீர்	வனம்
கூறி	நீர்

2. எதிர்ப்பதங்கள் எழுது :—

சந்தோஷமாக	சிரித்தது	வெளியே
தடித்த	ஜயித்தது	

3. ஒரு காட்டில் ஒரு குளம் இருந்தது. அதில் பல ஆமைகள் வசித்தன. இந்த இரண்டு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது.

4. யானைகள் தண்ணீரில் அங்குமிங்கும் துளைந்து சென்று நீரைத் கலக்கிச் சேராக்கின. இந்த வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகப் பிரி.

5. அங்குமிங்கும் — இதை இரண்டு வார்த்தைகளாகப் பிரித்தெழுது.

18. மாணிக்கம் புரிந்த உதவி

அக்கம் பக்கத்து	நா
சில்லறை வியாபாரி	கவனம்
வாடிக்கையாக	புலம்பு
தவணை	புலம்பல்
வசூல்	வாலிபன்
இடைவழி	பசிப்பிணி
ஹோட்டல்	க்ஷேமம்
கபோதிகள்	உயிர்ப்பிச்சை
அந்தகன்	ஆசீர்வதி
இடைவேளை ஆகாரம்	காரிருள்

தென்படவில்லை

நல்லூர் என்பது ஒரு சிறிய பட்டணம். அப் பட்டணத்தில் மாணிக்கம் என்ற பெயருடைய வாலி பன் ஒருவன் இருந்தான். அவன் அந்த ஊரிலுள்ள சுப்பையா முதலியார் அவர்களுடைய ஜவுளிக் கடையில் வேலைப்பார்த்து வந்தான். அவனுக்கு மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம்.

சுப்பையா முதலியாரின் ஜவுளிக்கடையில் அக் கம் பக்கத்துக் கிராமங்களிலுள்ள சில்லரை வியா பாரிகள் வாடிக்கையாகத் துணிகள் வாங்கிச் செல் லுவார்கள். பிறகு, தவணைப்படி ரூபாய் கொண்டு வந்து செலுத்துவார்கள்.

ஒரு சமயம் புதூர் என்ற கிராமத்திலுள்ள ஒரு வியாபாரி தவணைப்படி ரூபாய் கொண்டுவந்து செலுத்த வில்லை. ஆகையால், கடை முதலாளி மாணிக்கத்தை அந்தக் கிராமத்திற்குப் போய்ப் பணத்தை வசூல் செய்து கொண்டுவரச் சொன்னார்.

நல்லூரிலிருந்து புதூருக்குச் சுமார்பத் தொன்பது மைல் தூரம் இருக்கும். மாணிக்கம் புறப்படும் பொழுது மணி பதினொன்று. இடை வழியில் 'ஹோட்டல்' ஒன்றும் கிடையாது. ஆகையால் மாணிக்கம் இடைவேளை ஆகாரத்துக் காக மூன்று தோசைகளை ஓர் இலையில் வைத்துத் துணியால் மூட்டை கட்டிக் கொண்டான்; ஒரு சீசா நிறைய மோர் எடுத்துக் கொண்டான்; சைக்கிலில் புறப்பட்டான்.

வெயில் உக்கிரமாய்க் காய்ந்து கொண்டிருந் தது. மாணிக்கம் சைக்கிலில் 'விர்' என்று போய்க்

கொண்டிருந்தான். ஒன்பது மைல் தூரம் வந்தாய் விட்டது. இன்னும் பத்து மைல் தூரம் போகவேண்டும். வழியில் ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலில் ஒரு முடவனும் ஒரு குருடனும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் "ஐயோ பசி காதை அடைக்கிறதே; தாகத்தால் நா வறண்டு போகிறதே. ஒரு கவளம் சோறும்,



ஒரு வாய் நீரும் கொடுப்பார் யாருமில்லையே! ஆ! தெய்வமே!" என்று புலம்பிக் கொண்டிருந்தார்கள்!

அவர்களுடைய புலம்பலைக் கேட்ட மாணிக்கம் 'சட்' என்று சைக்கிலை விட்டுக் கீழே இறங்கினான். சைக்கிலிலிருந்த தோசை மூட்டையை எடுத்து அவிழ்த்து, அவர்களுக்குத் தலைக்கு ஒரு தோசை

கொடுத்தான். அவர்கள் தோசையைத் தின்று, மோரைக் குடித்துப் பசியாற்றினர்கள். அவர்கள் மாணிக்கத்தை நோக்கி, "நீ க்ஷேமமாய் இருக்க வேண்டும். எங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த உன்னைக் கடவுள் காப்பாற்றுவாராக' என்று ஆசீர் வதித்தனர்.

மாணிக்கம் தன்னிடம் மீதியிருந்த ஒரு தோசையைத் தின்று, மோரைக் குடித்துப் பசியாற்றிக் கொண்டான். பிறகு முடவனிடமும் கபோதியிடமும் விடை பெற்றுக்கொண்டு, சைக்கிலில் ஏறிப் புதூரை நோக்கிச் சென்றான். முடவன் குருடன் தோள்களின் மீது ஏறிக்கொண்டு வழிகாட்ட குருடன் நல்லூரை நோக்கி நடக்கலானன்.

மாணிக்கம் மாலை நான்கு மணிக்குப் புதூரை அடைந்தான். அங்கே தான் நாடிவந்த வியாபாரியைக் கண்டு பேசி, அவர் கொடுக்கவேண்டிய ரூபாய் ஐம்பதையும் பெற்றுக்கொண்டு திரும்பினன்.

பாதிதூரம் வருவதற்குள் சூரியன் அஸ்தமித்து விட்டது. காரிருள் சூழ்ந்துகொண்டது. மாணிக்கமும் விரைவாக ஊரை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

நல்லூர் போய்ச் சேர இன்னும் மூன்று மைல் தூரம்தான் இருந்தது. அங்கே சாலை ஓரமாக மரங்கள் நெருங்கி வளர்ந்திருந்தன. ஒரே இருட்டாக இருந்தது. சுற்றியுள்ள பொருள்கள் தெளிவாகத்

தென்படவில்லை. அவ்வழியாக மாணிக்கம் போய்க் கொண்டிருந்தபொழுது, இரண்டு திருடர்கள் இவன் முன் வந்து நின்று "நில், உன்னிடமுள்ள பொருள் களை எல்லாம் கொடு. மறுத்தால், மண்டையைப் பிளந்து விடுவோம்," என்று சொல்லித் தடிகளை ஓங்கி நின்றனர்.

மாணிக்கம் "ஐயோ, திருடர்கள், திருடர்கள், உதவி செய்யுங்கள்." என்று கூவினான். இவன் கூவினதற்குப் பதிலாக "வந்துவிட்டோம், வந்து



விட்டோம். விடாதே, பிடித்துக்கொள், பிடி, பிடி" என்று பல குரல்கள் கேட்டன. இதைச் செவி யுற்ற திருடர்கள் மாணிக்கத்திற்கு உதவிசெய்ய பல ஆட்கள் வந்துவிட்டனர் என்று நினைத்து ஓட்டம் பிடித்தனர்.

கொஞ்ச நேரத்திற்குள் மாணிக்கத்திற்கு முன்னால் மூடவனும் அந்தகனும் தோன்றினார்கள். அவர்கள் தங்கள் முன் நிற்பவன், தங்களுக்கு அன்று நடுப்பகலில் தோசையும் மோரும் கொடுத்துதவிய வாலிபன் என்பதை அறிந்து கொண்டனர். மாணிக்கமும் அவர்களைத் தெரிந்துகொண்டு, "உங்கள் இருவராலும்தான் இன்று நான் திருடர்களிடமிருந்து உயிர் தப்பினேன், எந்நாளும் நீங்கள் எனக்குச் செய்த உபகாரத்தை மறவேன்" என்று கூறி வந்தனம் செய்தான்.

பிறகு மாணிக்கம் முடவனைச் சைக்கிலில் உட்கார வைத்துச் சைக்கிலைத் தள்ளிக்கொண்டும், குருடனைக் கையால் பிடித்துக்கொண்டும் நடந்து சென்று நல்லூரை அடைந்தான்.

மாணிக்கம் முடவனுக்கும் குருடனுக்கும் தோசையும் மோரும் கொடுத்து, அவர்களுடைய பசிப்பிணியைப் போக்கினன். மாணிக்கத்தை அவர்கள் திருடர்களிடமிருந்து விடுவித்தனர்.

"உபகாரம் வீண் போகாது."

"நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போல் காணும்."

கேள்விகள்

1. மாணிக்கத்துக்கு என்ன வேலை? சம்பளம் என்ன?
2. அவன் புதூருக்குப் போவானேன்.

3. இடைவேளை உணவுக்கு மாணிக்கம் என்ன எடுத்துச் சென்றான்?

4 ஆலமரத்தடியில் யார் இருந்தார்கள்? மாணிக்கம் அவர்களுக்குச் செய்த உதவி என்ன?

5. அவர்கள் மாணிக்கத்துக்கு என்ன பதில் உதவி செய்தார்கள்?

அப்பியாசம் 34

1. இப்பாடத்தில் எத்தனை பாராக்கள் இருக்கின்றன? ஒவ்வொரு பாராவின் முக்கிய விஷயத்தையும் கண்டுபிடித்து எழுது.

2. வாக்கியங்களில் அமைக்க :

3. நல்லூரில் மாணிக்கம் என்ற பெயருடைய ஒரு வாலிபன் இருந்தான் :—

இந்த வாக்கியத்தை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

4. விரைவாக, நில், பல இவைகளின் எதிர்ப் பதங்களை எழுது.

5. மாணிக்கம் மூன்று தோசைகள் வைத்திருந்தான். அவன் குருடனுக்கு ஒரு தோசை கொடுத்தான்.

இந்த இரண்டு வாக்கியங்களிலும் உள்ள பெயர்ச் சொற்கள் எவை?

தோசை இந்தப் பெயர்ச்சொல் ஒரு பொருளைக் குறிக்கிறது.

தோசைகள்—இந்தப் பெயர்ச்சொல் ஒன்றுக்கு அதிகமான பொருள்களைக் குறிக்கிறது.

ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல் ஒருமையில் உள்ளது.

ஒன்றுக்கு அதிகமான பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல் பன்மையில் உள்ளது.

இந்தப் பாடத்தில் இருந்து ஒருமையில் வந்துள்ள ஐந்து பெயர்ச் சொற்களையும் பன்மையில் வந்துள்ள ஐந்து பெயர்ச் சொற்களையும் எழுது.

19. தெனாலிராமனும் திருடனும்

சமயோசித புத்தி	தடதடவென்று	கூக்குரலிட
ஊர் வம்பு	ரசமான	ஒளி
பாண்	பதுங்கி	பிரிக்கிறது
பேச்சுவாக்கு	தாண்டவமாடும்	சட்டென்று
யுக்தி	திருதிரு என்று	பற்றி
பூர்த்திசெய்து	நடுநடுங்கி	தீர்மானம்
முறை	கதி	தியானம்
அமளி	குறும்பு	போக்கிரி

தெனாலிராமனை உங்களுக்குத் தெரியும் அல்லவா? அவன் ஒரு பெரிய தந்திரசாலி; சமயோசித புத்தி உடையவன். அவன் கதையைக் கேட்க எல்லாக் குழந்தைகளும் ஆசைப்படுவார்கள்.

ஒருநாள் தெனாலிராமனும் அவன் மனைவியும் வழக்கம்போல் வீட்டில் படுத்திருந்தனர். அவர்களுக்கு தூக்கம் வரவில்லை. என்னென்னவோ

ஊர் வம்பை எல்லாம் பேசிக்கொண் டிருந்தார்கள். அந்த அறையின் ஒரு கோடியில் ஒரு பரண் உண்டு. அதில் உபயோகமற்ற பண்டங்க ளெல்லாம் கிடக்கும்.

பேச்சுவாக்கில் தெனலிராமனுடைய கண்கள் பரனுக்குச் சென்றன. பரண்மேல் யாரோ ஓர் ஆள் பதுங்கி இருப்பதுபோல் தெரிந்தது. அந்த அறையில் நல்ல வெளிச்சமில்லை. ஒரே ஒரு சிறு விடி விளக்குத்தான் இருந்தது. அது 'மினுக், மினுக்' என்று மின்மினிப் பூச்சியைப்போல் இருந் தது. தெனலிராமன் நன்ருகக் கவனித்துப் பார்த் தான். அங்கிருப்பது ஓர் ஆள்தான் என்று தீர்மானித்தான்.

இரவு பதினேரு மணிக்கு ஒருவரது வீட்டுப் பரண்மேல் வந்து ஒளிந்து கொண்டிருக்கும் ஆள் எப்படிப்பட்டவனு யிருப்பான்? அவன் ஒரு திருட னுகத்தான் இருக்க வேண்டுமென்று தெனலிராமன் தீர்மானித்தான். சட்டென்று ஒரு யுக்தி செய் தான்.

தன் மனைவிக்குப் பரண்மேல் இருக்கும் ஆள் தெரியாதபடி இருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். அவள் ஸ்திரீ அல்லவா? பயந்து கூக் குரலிட்டால் காரியம் கெட்டுப்போய் விடாதா?

மெதுவாக அவளோடு திரும்பவும் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான். இவர்களுக்குக் குழந் தைகள் இல்லை. ஆனல் அப்பொழுது தெனலி ராமன் மனைவி கர்ப்பமாக இருந்தாள். இன்னும் சில மாதங்களில் குழந்தை பிறக்கும் என்று எதிர்

பார்த்தனர். எனவே குழந்தைப்பேச்சைத் தெனுலி ராமன் தொடங்கினுன். அவன் மனைவியின் பெயர் சரோஜா.

தெனுலிராமன் :—சரோஜா! நமக்குக் குழந்தை பிறந்தால் என்ன பெயர் வைக்கலாம்?

சரோஜா :—போங்கள்! உங்களுக்கு இதுதான் வேலை. பிறந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது என்ன அந்தப் பேச்சு! மணி பன்னிரண்டாகிறது, தூங்குங்கள்.

தெனுலி :—இல்லை, இல்லை. குழந்தையைப் பற்றித் தான் பேசவேண்டும். நமக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்ததாக நான் நேற்றுத்தான் கனவு கண்டேன். என்ன அழகு! என்ன ஒளி! அதனுல்தான் பெயரைத் தீர்மானிக்க விரும்புகிறேன்.

சரோஜா :—என்ன ! என்ன ! கனுக் கண்டீர்களா! நமக்குக் குழந்தை பிறந்ததாகவா! ஆண் குழந்தையா? ஆண்டவனே! நீதான் இந்தக் கனவைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டும். (தியானிக்கிருள்) கிருஷ்ணன் என்று பெயர் வைத்தால் போகிறது.

தெனுலி :—போடி போ! அதெல்லாம் வேண்டாம். இராமன் என்று வைக்கலாமா? மகாலிங்கம் என்று வைக்கலாமா? இரு இரு....

சரோஜா :—எனக்கென்னவோ ஒன்றுமே முடிவு தோன்றவில்லை. நீங்களே சொல்லுங்கள்.

தேனுலி :—(யோசித்துவிட்டு) அடியே! எனக்கு ஒரு பெயர் நினைவுக்கு வருகிறது. நமது குருநாதர் அருள்தானே இந்தக் குழந்தைக்குக் காரணம். குருசாமி என்றுதான் பெயர் வைக்கவேண்டும்.

சரோஜா :—சரி, நன்ருகத்தான் இருக்கிறது. நமது வேலைக்காரன் பெயர் கூடக் குருசாமிதானே. அது எனக்குப் பிடிக்கிறது. குருசாமிகூட வாசலில்தான் படுத்திருக்கிருன்.

தேனுலி :—சரி அவனை நாம் செல்வமாகத்தான் வளர்க்க வேண்டும். அடிக்கவோ வையவோ கூடாது. அவன் எது கேட்டாலும் வாங்கித் தரவேண்டும்.

சரோஜா :—ஐந்து வயதானவுடன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடவேண்டும் ; குழந்தைக்கு அழகாகத் தலைவாரிப் பின்னி பூ வைத்துப் பொட்டிட்டு மையிட்டு நான் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புவேன். குழந்தை பள்ளிக்கூடம் போய்வர ஒரு வண்டி வாங்க வேண்டும்.

தேனுலி :—ஆமாம்; சிறு குழந்தை நடந்தால் கால் வலிக்கும். அவன் போக்கிரியாக இருப்பான் என்று நினைக்கிறேன். சாப்பிடுவதற்கு உன்னை மிகவும் படுத்துவான்.

சரோஜா:—படுத்திஞல் படுத்தட்டுமே! இரண்டடி வைத்தால் அடங்கிவிடுகிருன்.

தெனாலி :—ஒருநாள் சாயந்திரம் வீட்டுக்கு வந்தவுடன் ஒன்றும் சாப்பிடாமல் ஓடிவிட்டான் என்று வைத்துக்கொள். நீ என்ன செய்வாய்?

சரோஜா :—குருசாமி! குருசாமி என்று கூப்பிடுவேன்.

தெனாலி :—அவன் வராவிட்டால் என்ன செய்வாய்?

சரோஜா—உங்களிடம் சொல்லிக் கூப்பிடச் சொல்லுவேன்.

தெனாலி :—நான் என்ன செய்வேன் தெரியுமா?

(என்று சொல்லிய தெனாலிராமன் "குருசாமி, குருசாமி" என்று வீடு இடிந்து விழும்படி பலமுறை கத்திவிட்டு) "இப்படித்தான் கூப்பிடுவேன்" என்றான்.

இந்த அமளியில் வாசலில் இருந்த குருசாமி விழித்துக் கொண்டு கதவைத் தடதட வென்று தட்டிக்கொண்டே "சாமி" என்று கத்திக் கூப்பிட்டான்.

திருடன் இந்த இரசமான சம்பாஷணையைக் கேட்டுத் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு பரணில் நன்றாகப் பதுங்கிக் கொண்டான்.

சரோஜா வாயோயாமல் சிரிக்கத் தொடங்கினாள். தெனாலிராமன் எழுந்து போய் வாசற் கதவைத் திறந்தான். குருசாமி பயம் தாண்டவமாடும் முகத்தோடு, "என்ன சாமி! ஏன் கத்தினீர்கள்?" என்றான்.

அவனோடு பேசிக்கொண்டே வாசற்கதவைத் தாளிட்டுவிட்டு அவனையும் கூட்டிக்கொண்டு தெனுலி ராமன் படுக்கை அறைக்கு வந்துவிட்டான். எஜ மானி அம்மாள் விழுந்து சிரிப்பதைப் பார்த்த குரு சாமிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. திருதிரு என்று விழித்தான்.

உடனே தெனுலிராமன் தங்களுக்குள் நடந்த பேச்சை எல்லாம் அவனிடம் சொன்னான். "நான் உன்னைக் கூப்பிடவில்லை; என் மகனைத்தான் கூப் பிட்டேன். வேண்மானல் சாட்சிக்கு அதோ பரணில் இருப்பவரைக்கேள்" என்றான்.

திகைத்துப்போன குருசாமிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உண்மை விளங்கிற்று. சட்டென்று மூலையிலிருந்த தடியொன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். பிறகு குருசாமி பரணிலிருந்த ஆளைப்பார்த்து, "இறங்கி வாடா! திருட்டுப் பயலே!" என்று அதட்டினான். தெனுலிராமனே குருசாமியை அடக்கி மரியாதையாக, "கீழே வந்து நான் குருசாமி யைக் கூப்பிட்டேனா இல்லையா என்று சொல்லுங் கள்" என்று குறும்பாக வேண்டினான்.

வேறு கதியில்லாமல் இறங்கிவந்த திருடனைப் பிடித்துக் கட்டிப் போலீஸில் கொண்டு போய் ஒப்பு வித்துவிட்டார்கள். திருடனுக்கு அழுவதா, சிரிப் பதா என்று தெரியவில்லை. சரோஜாவுக்கு பயம் ஒரு பக்கம், சிரிப்பு ஒரு பக்கம்; குருசாமிக்கு ஐயா வின் சாமார்த்தியத்தில் அபார நம்பிக்கை வந்து விட்டது, எப்படி? தந்திரம்!

கேள்விகள்

1. திருடன் எங்கே இருந்தான்?
2. தெனாலிராமன் செய்த யுக்தி என்ன?
3. தெனாலிராமன் என்ன கனவு கண்டான்?
4. குழந்தையை எப்படிப் பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டுமென்று சரோஜா நினைத்தாள்?
5. இவர்கள் சம்பாஷணையைக் கேட்ட திருடன் என்ன எண்ணியிருப்பான்?
6. "குருசாமி, குருசாமி" என்று தெனாலிராமன் கத்தியபோது குருசாமி என்ன நினைத்திருப்பான்?

அப்பியாசம் 35

I. மினுக் மினுக்கென்று—இதுபோல் இரட்டைச் சொற்களை எல்லாம் பொறுக்கி எழுது:

II. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுது:

1. அவர்களுக்குக் குழந்தைகள்———
2. நமக்குக் குழந்தை———பெயர் வைக்கலாம்?
3. நான் நேற்று ———(கனவு).
4. குழந்தையின் பெயரை ———விரும்புகிறேன்.
5. இருஷ்ணன் ———பெயர் வைத்தால்———

அப்பியாசம் 36

1. இப்பொழுதே பிடித்து என்ன அந்த பேச்சு? வேண்டாம் என்ற சொல்லை உபயோகித்து இந்த வாக்கியத்தை அர்த்தம் கெடாமல் எழுது.

2. குருசாமி என்றுதான் பெயர் வைக்க வேண்டும். 'தான்' என்பதை இந்த அர்த்தத்தில் உபயோகித்து இரண்டு வாக்கியங்கள் எழுது.

3. எஜமானி அம்மாள் சிரிப்பதைப் பார்த்த குருசாமிக்கு ஒன்றுமே விளங்கவில்லை: 'ஏ' என்பது இந்த வாக்கியத்தில் உபயோகிக்கப் பட்டிருப்பதைக் கவனி. இதுபோல் 'ஏ'யை அமைத்து ஒரு வாக்கியம் எழுது.

20. நற்போதனை

1. காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

2. பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கும் வர மாட்டாது பாப்பா.

3. துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்து விடலாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வமுண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

4. சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர் மேலோர்.

—பாரதியார்